இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 149 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – மார்கழி 23 – திங்கள்கிழமை 08 ஜனவரி 2024 – வெளியூர் 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 149 : Thiruvalluvar Year - 2054 - Margazhi 23 - Monday 08 January 2024 - Dak 8 Pages ₹ 5.00


## தொழில்துறை வரலாற்றில் மகத்தான அத்தியாயம் இந்த மாநாடு! - தமிழ்நாட்டில் குவியும் தொழில் முதலீடுகளால்

# 1 லட்சம் கோடி டாலர் பொருளாதார இலக்கை அடைவோம் !

## உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை தொடங்கிவைத்து முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி !

**சென்னை, ஜன.8-**

**உலக முதலீட்டாளர்கள் இரண்டு நாள் மாநாட்டை நேற்று துவக்கி வைத்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றுகையில் தொழில்துறை வரலாற்றில் மகத்தான அத்தியாயமாக இந்த மாநாடு அமையும் எனவும், தமிழ்நாட்டில் குவியும் தொழில் முதலீடுகளால் 1 லட்சம் கோடி டாலர் பொருளாதார இலக்கை அடைவோம் எனவும் உறுதிபடக் கூறினார்.**





முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (7.1.2024) சென்னை வர்த்தக மையத்தில், இரண்டு நாள் "உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2024யை தொடங்கி வைத்து, விழா பேருரையாற்றினார். இந்நிகழ்ச்சியில், ஒன்றிய வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சர் பியுஷ் கோயல், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், பன்னாட்டு தூதரக அதிகாரிகள், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, ஜப்பான் நாட்டின் கோச்சி மாகாண ஆளுநர் ஹமாதா செய்ஜி, இந்திய தொழில் கூட்டமைப்பின் தேசியத் தலைவர் ஆர்.தினேஷ், ஓலா எலக்ட்ரிக் நிறுவனத்தின் நிறுவனர் மற்றும் தலைமை செயல் அலுவலர் பவிஷ் அகர்வால், கோத்ரெஜ் நிறுவனத்தின் தலைவர் திருமதி. நிசாபா கோத்ரெஜ், டி.வி.எஸ் நிறுவனத்தின் தலைவர் எமரிட்டஸ் வேணு ஸ்ரீநிவாசன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி. அருண்ராய், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களின் தலைவர்கள் / தலைமை செயல் அலுவலர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (7.1.2024) சென்னை வர்த்தக மையத்தில் "உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2024யை தொடங்கி வைத்து, ஆற்றிய விழாப்பேருரை வருமாறு:–

பொதுவாக வெளிநாடுகளுக்கு செல்லும்போதுதான் நான் சூட் போடுவது வழக்கம். ஆனால் இங்கு எல்லா வெளிநாடுகளும் தமிழ்நாட்டிற்குள் வந்துவிட்ட காரணத்தால், இங்கே நான் கோட் சூட் அணிந்து வந்திருப்பது பொருத்தமாக உள்ளது. இன்று காலையிலிருந்து சென்னையில் மழை பெய்து கொண்டிருக்கிறது. நான் இங்கு வந்தவுடன், முதலீடும் மழையாக பெய்யும் என்ற நம்பிக்கை எனக்கு வந்துள்ளது.

### தனித்த தொழில்வளம் கொண்ட தமிழ்நாடு!

உலகம் முழுவதும் இருந்து வந்திருக்கும் எனது அருமை சகோதர, சகோதரிகளே! நீங்கள் அனைவரும் சமத்துவத்தைப் போற்றிய வள்ளுவரும், கணியன் பூங்குன்றனாரும் பிறந்த மண்ணுக்கு வந்திருக்கிறீர்கள். பல வரலாற்றுப் பெருமைகளையும், புகழையும் கொண்ட தமிழ்நாட்டுக்கு வருகை தந்திருக்கிறீர்கள். உங்கள் அனைவரையும் நான் வரவேற்கிறேன். இந்த மாநிலத்தின் முதலமைச்சராக மட்டுமின்றி, உங்கள் சகோதரனாக வருக, வருக, வருக என நான் வரவேற்கிறேன்.

தொழில் துறையில் மேன்மையும், தனித்த தொழில்வளமும் கொண்ட மாநிலம்தான், தமிழ்நாடு! பண்டைய காலத்தில் இருந்து கடல் கடந்தும் வாணிபம் செய்தவர்கள்! அதனால்தான், "திரை கடல் ஓடியும் திரவியம் தேடு – என்று தொழிலை ஊக்குவிக்கும் பழமொழி உருவானது! இந்தியாவுக்கு பல்வேறு வகைகளில் தமிழ்நாடு, முன்மாதிரி மாநிலம்! 1920–ஆம் ஆண்டு 'தென்னிந்திய வேலையளிப்போர் கூட்டமைப்பு' எனப்படும் தொழிலதிபர்கள் அமைப்பு தொடங்கப்பட்டது. இதனால்தான், தமிழ்நாடு அனைத்து வகைத் தொழில்களிலும், முன்னேறிய மாநிலமாக இன்றைக்கு இருக்கிறது.

கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கின்ற மாநிலமாக இருப்பதால், இதற்கான திறமையான தொழிலாளர்கள் தமிழ்நாட்டில் ஏராளமாக கிடைத்தார்கள். சிறந்த தொழில் அதிபர்களும், திறமையான தொழிலாளர்களும் நிறைந்த தமிழ்நாட்டுக்கு, உலகத் தொழில் முனைவோரான நீங்கள் வந்திருக்கிறீர்கள். நாங்கள் விடுத்த அழைப்பை ஏற்று வந்துள்ள உங்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்பதுடன் எனது உளமார்ந்த நன்றியையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

## ஆட்சி மாற்றத்திற்குப் பிறகு இந்த இரண்டரையாண்டில் அனைத்துத் துறைகளிலும் முன்னேறிய மாநிலம் தமிழ்நாடு!

### ஒன்றிய தொழில்துறை அமைச்சர் பியுஷ் கோயலை நெஞ்சார வரவேற்கிறேன்!

இந்த மாநாட்டிற்கு தலைமையேற்க வந்திருக்கும் ஒன்றிய வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சர் பியுஷ் கோயல் அவர்களை நான் நெஞ்சார வரவேற்கிறேன். பியுஷ் கோயல் அவர்களது குடும்பம் அரசியல் குடும்பம். அப்பா, அம்மா இரண்டு பேருமே அரசியலில் கோலோச்சியவர்கள். வங்கித் துறை பணியாளராக வாழ்க்கையை தொடங்கி நிதி மற்றும் வர்த்தக துறையில் தனித்துவம் படைத்தவர் பியுஷ் கோயல் அவர்கள். அவர் இங்கு வந்து தமிழ்நாட்டிற்கு பெருமை சேர்த்திருக்கிறார். அவருக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

### அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா – அரசு அதிகாரிகளை பாராட்டுகிறேன்!

இந்த மாநாட்டை சிறப்பாக ஏற்பாடு செய்துள்ள தமிழ்நாடு தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா அவர்களையும் – தொழில் துறை செயலாளர் அருண்ராய் அவர்களையும் – அனைத்துத் துறைகளைச் சார்ந்த அதிகாரிகளையும் – அரசு உயர் அலுவலர்களையும் என அனைவரையும் பாராட்டுகிறேன்! வாழ்த்துகிறேன்!

### 9 நாடுகள் பங்குதாரர் நாடுகளாக இணைந்துள்ளன!

உலக நாடுகளை உள்ளடக்கிய இந்த நிகழ்வில், அமெரிக்கா, இங்கிலாந்து, சிங்கப்பூர், ஜப்பான், தென்கொரியா, பிரான்ஸ், ஆஸ்திரேலியா, ஜெர்மனி மற்றும் டென்மார்க் ஆகிய 9 நாடுகள் எங்களுடன் பங்குதாரர் நாடுகளாக இணைந்துள்ளன.

தொடர்ச்சி 4–ஆம் பக்கம்

---

## உலக முதலீட்டாளர்கள் மாநாடு: பன்னாட்டு நிறுவனங்களுடன்

# முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்!

## முடிவுற்ற பணிகளை தொடங்கிவைத்து, புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார் முதல்வர் !

**சென்னை, ஜன. 8 -**

**சென்னை வர்த்தக மையத்தில் "உலக முதலீட்டாளர்கள் மாநாடு2024" நடைபெற்றது. இந்த மாநாட்டை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்து, முன்னணி பன்னாட்டு நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டு, நிறுவனங்களின் முடிவுற்ற திட்டப் பணிகளை தொடங்கி வைத்து, புதிய திட்டப் பணிக்கு அடிக்கல் நாட்டினார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (7.1.2024) சென்னை வர்த்தக மையத்தில், இரண்டு நாள் "உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2024யை தொடங்கி வைத்தார். விழாவில் தலைமையுரை ஆற்றிய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டில் நிலவும் சிறந்த தொழில் சூழல் பற்றி எடுத்து கூறினார்.

இம்மாநாட்டில், ஒன்றிய வர்த்தகம் மற்றும் தொழில் துறை, நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோகம் மற்றும் ஜவுளி அமைச்சர் பியுஷ் கோயல் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார். தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா இந்நிகழ்ச்சியின் தொடக்க உரை ஆற்றினார்.

### புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்

இந்நிகழ்வின்போது, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் டாடா எலெக்ட்ரானிக்ஸ், பெகட்ரான், டி.வி.எஸ். குழுமம், மிட்சுபிஷி, ஏ.பி. மோலார் மெர்ஸ்க், ஹுண்டாய், JSW, அசோக் லேலண்ட் மற்றும் வின்பாஸ்ட் ஆகிய முக்கிய நிறுவனங்களின் திட்டங்களுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன.

### கொள்கை மற்றும் செயல்திட்ட அறிக்கை வெளியீடு

தமிழ்நாடு குறைக்கடத்தி மற்றும் மேம்பட்ட மின்னணுக் கொள்கை 2024 மற்றும் 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் இலக்கினை எய்துவதற்கான செயல்திட்ட அறிக்கை ஆகியவற்றை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், வெளியிட்டார்.

### நிறுவனங்களின் முடிவுற்ற திட்டப் பணிகளை தொடங்கி வைத்து, புதிய திட்டப் பணிக்கு அடிக்கல் நாட்டுதல்

அதனைத் தொடர்ந்து, க்வால்காம் டிசைன் சென்டர் மற்றும் ஃபர்ஸ்ட் சோலார் நிறுவனங்களின் திட்டங்களை தொடங்கி வைத்து, கோத்ரெஜ் நிறுவனத்தின் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டினார்.

### உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய பன்னாட்டு மற்றும் முன்னணி நிறுவனங்களின் தலைமை அதிகாரிகள்

இந்நிகழ்ச்சியில், ஜப்பான் நாட்டின்

தொடர்ச்சி 4–ஆம் பக்கம்



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று (7.1.2024) சென்னை வர்த்தக மையத்தில் நடைபெற்ற "உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2024 தொடக்க விழாவில், டி.வி.எஸ். குழுமம் தமிழ்நாட்டில் வாகன உற்பத்தி, தகவல் தொழில்நுட்ப துறையில் கூடுதல் முதலீடுகள் செய்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இந்நிகழ்ச்சியில், ஒன்றிய வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சர் பியுஷ் கோயல், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், பன்னாட்டு தூதரக அதிகாரிகள், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா மற்றும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களின் தலைவர்கள் / தலைமை செயல் அலுவலர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

திங்கள்கிழமை 08-01-2024

# ‘செபி’ நேர்மையாக விசாரிக்கட்டும்!

‘அதானி குழுமம் மீதான ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்க சிறப்பு புலனாய்வுக் குழுவை அமைக்க வேண்டும் என்று போடப்பட்ட மனுவை நிராகரித்திருக்கிறது உச்சநீதிமன்றம். அதானி வழக்கை ‘செபி’ அமைப்பே விசாரிக்கலாம் என்றும் உச்சநீதிமன்றம் தீர்ப்பு அளித்துள்ளது. இந்த தீர்ப்பை அதானி வரவேற்று இருக்கிறார்.

**“இந்த தீர்ப்பின் மூலமாக உண்மை வெற்றி பெற்றுள்ளது. எங்களுக்குத் துணை நின்ற அனைவர்க்கும் நன்றி. இந்தியாவின் வளர்ச்சிக்கு எங்களது பங்களிப்பு தொடரும்” என்று அதானி தனது மகிழ்ச்சியை வெளியிட்டு இருக்கி றார். ‘அதானி தவறே செய்யவில்லை’ என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பு அளிக்க வில்லை. ‘அவர் மீதான விசாரணையை செபி அமைப்பானது செய்யலாம்’ என்று தான் உச்சநீதிமன்றம் சொல்லி இருக்கிறது. எனவே, உடனடி மகிழ்ச்சி அடைய எதுவும் நடந்து விடவில்லை.விசாரணையின் இறுதி முடிவுகள் வரும் வரை அதானி காத்திருக்கத் தான் வேண்டும்.**

‘செபி’ எனப்படுவது இந்திய பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியம் ஆகும். பங்குச் சந்தைகள், நிதிச் சந்தைகளை ஒழுங்குபடுத்தும் கட்டுப்பாட்டு அமைப்பு ஆகும். 1988 ஆம் ஆண்டு இது உருவாக்கப்பட்டாலும், 1992 ஆம் ஆண்டு தான் ‘செபி சட்டம்’ உருவாக்கப்பட்டது. பங்குச் சந்தைகளை கட்டுப் படுத்தும் அமைப்பாக இது செயல்பட்டாலும் ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் இருக்கும் அமைப்பு தான் இது. ஒன்றிய நிதி அமைச்சக அதிகாரிகள், சட்ட அமைச்சக அதிகாரிகள் இதில் இருப்பார்கள். ஐந்து உறுப்பினர்களை நியமிப் பதும் ஒன்றிய அரசு தான். ரிசர்வ் வங்கி அதிகாரி ஒருவர் இதில் இருப்பார். ஒன்றிய அரசின் நிதியில் இருந்து தான் இந்த அமைப்பே செயல்படுகிறது. ஒன்றிய அரசின் மானியத்தில் தான் இது இயங்குகிறது. செபி வாரியத்தின் தலைவரையோ, உறுப்பினர்களையோ எப்போதும் நீக்கும் அதிகாரம் ஒன்றிய அரசுக்கே உண்டு. செபி, தனது ஒவ்வொரு செயலுக்கும் ஒன்றிய அரசின் அனுமதியைப் பெற்றாக வேண்டும்.

முழுக்க முழுக்க ஒன்றிய அரசின் தொங்கு சதையாக இருக்கும் ஒரு அமைப்பு, அதானி மீதான குற்றச்சாட்டை நேர்மையாக விசாரிக்குமா? என் பது சந்தேகத்துக்குரியதே!

அதானி மீதான குற்றச்சாட்டுகளை ஏற்கனவே செபி விசாரித்தது. எந்தத் தவறும் அதானி செய்யவில்லை என்று செபியும் சொல்லி விட்டது. அதே செபி தான் மீண்டும் விசாரிக்க வேண்டும் என்று தீர்ப்பளித்துள்ளது உச்சநீதிமன்றம்.

அதானி மீதான குற்றச்சாட்டுகள் என்பவை தனிப்பட்ட ஒரு தொழில் அதிபர் மீதான குற்றச்சாட்டுகள் அல்ல, தனிப்பட்ட ஒரு தொழில் நிறுவனத்தின் மீதான குற்றச்சாட்டுகளும் அல்ல. அதானி என்பவர், பிரதமர் நரேந்திர மோடியின் இன்னொரு முகமாகப் பார்க்கப்படுகிறார். அதனால் தான் அதானி விவகாரத்தை மிக ‘சீரியஸான’ விவகாரமாகப் பார்க்க வேண்டி இருக்கிறது.

காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரான ராகுல்காந்தி இது குறித்து தொடர்ச்சியாக வைத்து வரும் குற்றச்சாட்டுகள் மிகுந்த கவனத்துக்குரியன.

**“2014 ஆம் ஆண்டு 8 பில்லியன் டாலராக இருந்த அதானியின் சொத்து மதிப்பு இப்போது 140 பில்லியன் ஆனது எப்படி? 2014 ஆம் ஆண்டு உலகப் பணக்காரர்கள் பட்டியலில் 609 ஆவது இடத்தில் இருந்தவர், 2022 ஆம் ஆண்டு இரண்டாவது இடத்தை பிடித்தது எப்படி? விமான நிலையம் என்றாலும் அதானி தான். துறைமுகம் என்றாலும் அதானி தான். இந்தியா முழுக்க அனைத்து மாநிலங்களிலும் அதானி தான். அவர் எந்தத் தொழிலைத் தொடங் கினாலும் நஷ்டம் அடைவது இல்லையே எப்படி? இவர்கள் இருவருக்குமான உறவு குஜராத் முதலமைச்சராக மோடி இருக்கும் காலத்தில் இருந்து தொடர் கிறது.**

**முன் அனுபவம் இல்லாதவர்கள் விமான நிலைய மேம்பாட்டுத் திட்டத்தை மேற்கொள்ள இயலாது என்ற விதியைத் திருத்தினார்கள். அதானிக்கு 6 விமான நிலையங்கள் தரப்பட்டன. இஸ்ரேலுக்கு பிரதமர் செல்கிறார். அவருக்குப் பின் னாலேயே நடந்து அதானி செல்கிறார். உடனே இஸ்ரேல் இந்தியா இடையிலான அனைத்து தொழில்துறை ஒப்பந்தங்களும் அதானிக்கு வந்து விடுகிறது. இதே போன்று ஆஸ்திரேலியாவுக்கு பிரதமர் செல்கிறார். உடனே மாயமந்திரமாக எஸ்.பி.ஐ. வங்கி அதானிக்கு 1 பில்லியன் டாலர் கடன் வழங்குகிறது. வங்க தேசத்திற்கு மோடி முதல் முறையாக செல்கிறார். அங்கு மின்விநியோகத்திற்கான திட்டம் முடிவாகிறது. சில நாட்களுக்கு பின் வங்கதேசத்தின் மின்வாரியம் 25 ஆண்டுகளுக்கு மின் விநியோக உரிமையை அதானிக்கு வழங்குகிறது. 1500 மெகாவாட் மின்சார ஒப்பந்தம் அதானிக்கு கிடைக்கிறது. அங்கிருந்து இலங்கை செல்கிறார்.**

**ஜூன் 2022ல் இலங்கை காற்றாலை மின்உற்பத்தி உரிமத்தை அதானிக்கு வழங்க வேண்டும் என மோடி அழுத்தம் கொடுப்பதாக ராஜபட்சே சொன்னார். இதுதான் உங்கள் வெளியுறவுக் கொள்கை. இது இந்திய வெளியுறவுக் கொள்கை அல்ல. அதானியின் வெளியுறவுக்கொள்கை” - என்று குற்றச்சாட்டுகளை பகிரங்கமாக வைத்து வருகிறார் ராகுல்காந்தி. அதற்கும் இதுவரை அதிகாரப்பூர்வ பதில் இல்லை.**

அதானி பதில் சொல்ல வேண்டிய குற்றச்சாட்டுகள் அல்ல இவை, பிரதமர் பதிலளிக்க வேண்டியவை இவை. இது வரை பதில் அளிக்கவில்லை. நாடா ளுமன்றமே முடங்கிக் கிடந்தது. அதைப் பற்றி பா.ஜ.க. கவலைப்படவில்லை. நாடாளுமன்றக் கூட்டுக்குழு விசாரணை நடத்தப்பட்டிருக்க வேண்டும். ஒன்றிய அரசே முன்வந்து சிறப்பு குழு விசாரணையை அமைத்திருக்க வேண்டும். பா.ஜ.க.விடம் இதனை நாம் எதிர்பார்க்க முடியாது. இப்போதும் காலம் கடந்துவிட வில்லை, சிறப்பு குழு விசாரணையை அமைத்து தன்னை பா.ஜ.க. நிரூபித்தாக வேண்டும்.

அதானி விவகாரத்தை ‘செபி’ விசாரிக்கலாம் என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பு அளித்துள்ளது. ‘செபி’ நேர்மையாக விசாரிக்க வேண்டும். நேர்மை யாக விசாரிக்குமா என்று சொல்ல முடியாது. ஆனால், உச்சநீதிமன்றம் ‘செபி’யை நம்புகிறது. இவ்வளவு நம்பிக்கை வைக்கும் உச்சநீதிமன்ற மானது, ‘செபி’யைக் கண்காணிக்க வேண்டும். இந்த விசாரணையானது உச்சநீதிமன்றத்தின் நேரடி கண்காணிப்பில் நடைபெற வேண்டும்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (7.1.2024) சென்னை வர்த்தக மையத்தில், இரண்டு நாள் “உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2024யை தொடங்கி வைத்து, 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் இலக்கினை எய்துவதற்கான செயல்திட்ட அறிக்கையை வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில், ஒன்றிய வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சர் பியுஷ் கோயல், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், பன்னாட்டு தூதரக அதிகாரிகள், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, ஜப்பான் நாட்டின் கொச்சி மாகாண ஆளுநர் ஹமாதா செய்ஜி, இந்திய தொழில் கூட்டமைப்பின் தேசியத் தலைவர் ஆர்.தினேஷ், ஓலா எலக்ட்ரிக் நிறுவனத்தின் நிறுவனர் மற்றும் தலைமை செயல் அலுவலர் பவிஷ் அகர்வால், கோத்ரெஜ் நிறுவனத்தின் தலைவர் திருமதி. நிசாபா கோத்ரெஜ், டி.வி.எஸ் நிறுவனத்தின் தலைவர் எமரிட்டஸ் வேணு ஸ்ரீநிவாசன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி. அருண்ராய், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களின் தலைவர்கள் / தலைமை செயல் அலுவலர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று (7.1.2024) சென்னை வர்த்தக மையத்தில் நடைபெற்ற ”உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2024 தொடக்க விழாவில், செங்கல்பட்டு மாவட்டத்தில் அமைந்துள்ள பெகட்ரான் நிறுவனத்தின் மின்னணு உற்பத்தி தொழிற்சாலை விரிவாக்கத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இந்நிகழ்ச்சியில், ஒன்றிய வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சர் பியுஷ் கோயல், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், பன்னாட்டு தூதரக அதிகாரிகள், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, பெகட்ரான் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் சார்லஸ் லின், ஜப்பான் நாட்டின் கோச்சி மாகாண ஆளுநர் ஹமாதா செய்ஜி, இந்திய தொழில் கூட்டமைப்பின் தேசியத் தலைவர் ஆர்.தினேஷ், ஓலா எலக்ட்ரிக் நிறுவனத்தின் நிறுவனர் மற்றும் தலைமை செயல் அலுவலர் பவிஷ் அகர்வால், கோத்ரெஜ் நிறுவனத்தின் தலைவர் திருமதி. நிசாபா கோத்ரெஜ், டி.வி.எஸ் நிறுவனத்தின் தலைவர் எமரிட்டஸ் வேணு ஸ்ரீநிவாசன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி. அருண்ராய், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களின் தலைவர்கள் / தலைமை செயல் அலுவலர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை சிறப்பாக நடத்தும் முதல்வரைப் பாராட்டுகிறேன்!

# தொழில் முன்னேற்றத்திற்கு தமிழ்நாட்டின் பங்களிப்பு அளப்பரியது!

## உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் ஒன்றிய அமைச்சர் பியுஷ் கோயல் புகழாரம்!

**சென்னை, ஜன. 8–**

**மாநிலங்களின் வளர்ச்சியே இந்தியாவின் வளர்ச்சிக்கு முக்கிய மானது. உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை சிறப்பாக நடத்தும் முதல் வர் மு.க.ஸ்டாலின் அவர்களை பாராட்டுகிறேன் என தமிழ்நாடு அரசுக்கு ஒன்றிய அமைச்சர் பியுஷ் கோயல் புகழாரம் சூட்டினார்.**



சென்னையில் உலக முதலீட்டா ளர்கள் மாநாட்டில் ஒன்றிய வர்த்த கம் & தொழில்துறை அமைச்சர் பியுஷ் கோயல் பேசியதாவது:–

வளமான கலாச்சாரத்தையும், வரலாற்றையும் கொண்ட தமிழ் நாட்டின் மீது உலக முதலீட்டாளர் களின் கவனம் குவிந்துள்ளது.

ஆதித்யா எல் 1 விண்கலத்தின் திட்ட இயக்குநராக தமிழ்நாட்டைச் சேர்ந்தவர் உள்ளது பெருமைக்கு ரியது. மாநிலங்களின் வளர்ச்சியே இந்தியாவின் வளர்ச்சிக்கு முக்கிய மானது.

2030ம் ஆண்டுக்குள் ஒரு லட் சம் கோடி டாலர் பொருளாதார இலக்கு, ஆண்டுக்கு 18% வளர்ச்சி என்ற குறிக்கோளுடன் தமிழ்நாடு அரசு செயல்படுகிறது.

நாட்டின் தொழில் முன்னேற்ற த் திற்கு தமிழ்நாட்டின் பங்களிப்பு அளப்பரியது.

இந்தியாவின் உள்நாட்டு உற்பத்தி 7.7 சதவீதமாக நீடித்து வருகிறது.

இந்தியாவில் உள்ள பெண் தொழிலாளர்களில் 43 சதவீதம் பேர் தமிழ்நாட்டில் உள்ளனர்.

உலகிலேயே தொழில் முத லீட்டுக்கு உகந்த நாடாக இந்தியா உள்ளது.

நாட்டின் உள்கட்டமைப்புகளை மேம்படுத்த ஒன்றிய அரசு தொடர்ந்து முயற்சி செய்து வரு கிறது.

உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை சிறப்பாக நடத்தும் முத லமைச்சர் மு.க.ஸ்டாலினை பாராட்டுகிறேன்.

நீடித்த நிலையான வளர்ச்சி அனைவருக்கும் சென்றடைய வேண்டும் என்பதே ஒன்றிய அர சின் நோக்கம். தமிழ்நாட்டின் பொருளாதாரம் வேகமாக வளர்ந்து வருகிறது.

தமிழ்நாட்டில் நடைபெறும் உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் பங்கேற்பது மகிழ்சசியளிக்கிறது.

2030க்குள் தமிழ்நாடு ஒரு லட்சம் கோடி டாலர் பொருளாதார இலக்கை எட்ட எனது வாழ்த்துகள்.

தமிழ்நாடு ஏராளமான வளங்க ளைக் கொண்ட மாநிலம் – விண் வெளி ஆராய்ச்சியில் இஸ்ரோ பல் வேறு சாதனைகளை படைத்து வருகிறது.

மாநிலங்கள் வளர்ச்சியடைந் தால்தான் இந்தியாவும் வளர்ச்சி யடையும்.

தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி வேகமாக வளர்ந்து வரு வது பாராட்டுதலுக்குரியது.

இந்தியாவில் உள்ள தொழிற்சா லைகளில் பணிபுரியும் பெண் தொழிலாளர்களில் 43% பேர் தமிழ்நாட்டில் பணிபுரிகின்றனர் என்பது பாராட்டுதலுக்குரியது.

இவ்வாறு ஒன்றிய அமைச்சர் பியுஸ் கோயல் பேசினார்.



சென்னை மெரினா கடற்கரை கலங்கரை விளக்கம் அருகில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு துறை மற்றும் டி.ஜி. வைஷ்னவ கல்லூரி தொடர்பியல் துறையுடன் இணைந்து கடந்த ஒரு வருடத்தில் விளையாட்டு துறையில் நடைபெற்ற பல்வேறு நிகழ்வுகளின் விபரங்கள் உள்ளடக்கிய கையேட்டை வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில் மேயர் ஆர் பிரியா, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்யா மிஸ்ரா. நாடாளுமன்ற உறுப்பினர்கள்.தயாநிதி மாறன், டாக்டர் கலாநிதி வீராசாமி, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர்.ஜெ.மேகநாத ரெட்டி, கூடைப்பந்து வீரர் ஜீவானந்தம், வாள்வீச்சு வீராங்கனை மரியா அக்சுஷிதா உடனிருந்தனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு (6.1.2024) அன்று சென்னை, கிண்டி, மெட்ராஸ் ரேஸ் கோர்ஸ் மைதானத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டையொட்டி நடைபெற்ற “கலைஞர் – கலைஞர் 100” திரைத்துறையின் மாபெரும் கலை விழாவில், தமிழ்நாடு திரைப்பட தயாரிப்பாளர்கள் சங்கத்தின் சார்பில் அதன் நிர்வாகிகள் நினைவுப் பரிசு வழங்கினார்கள். இவ்விழாவில், நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த், கலைஞானி கமல்ஹாசன், முன்னணி நடிகர்கள், நடிகர் சிவ ராஜ்குமார், தென்னிந்திய நடிகர் சங்கத்தின் துணைத் தலைவர் பூச்சி முருகன், தமிழ்த் திரைப்படத் தயாரிப்பாளர்கள் சங்கத் தலைவர் முரளி ராமநாராயணன், செயலாளர்கள் ஆர். ராதாகிருஷ்ணன் மற்றும் எஸ். கதிரேசன், திரைப்பட இயக்குநர்கள், தயாரிப்பாளர்கள், நடிகர்கள், நடிகைகள், திரைத்துறையின் பல்வேறு சங்கங்களின் நிர்வாகிகள், திரைப்பட விநியோகஸ்தர்கள், திரையரங்க உரிமையாளர்கள், திரைப்படத் துறையின் தொழில்நுட்ப கலைஞர்கள் மற்றும் தொழிலாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (6.1.2024) சென்னை, கிண்டி, மெட்ராஸ் ரேஸ் கோர்ஸ் மைதானத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டையொட்டி நடைபெற்ற ”கலைஞர் – கலைஞர் 100” திரைத்துறையின் மாபெரும் கலை விழாவில் கலந்து கொண்டு, தலைமை உரையாற்றினார். இவ்விழாவில், நீர்வளத் துறை அமைச்சர். துரைமுருகன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், சூப்பர் ஸ்டார். ரஜினிகாந்த், கலைஞானி கமல்ஹாசன், முன்னணி நடிகர்கள், நடிகர் சிவ ராஜ்குமார், தென்னிந்திய நடிகர் சங்கத்தின் துணைத் தலைவர். பூச்சி முருகன், தமிழ்த் திரைப்படத் தயாரிப்பாளர்கள் சங்கத் தலைவர்.முரளி ராமநாராயணன், செயலாளர்கள். ஆர். ராதாகிருஷ்ணன் மற்றும் எஸ். கதிரேசன், திரைப்பட இயக்குநர்கள், தயாரிப்பாளர்கள், நடிகர்கள், நடிகைகள், திரைத்துறையின் பல்வேறு சங்கங்களின் நிர்வாகிகள், திரைப்பட விநியோகஸ்தர்கள், திரையரங்க உரிமையாளர்கள், திரைப்படத் துறையின் தொழில்நுட்ப கலைஞர்கள் மற்றும் தொழிலாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### எழுத்தாற்றலாலும் படைப்பாற்றலாலும் ரசிகர்களின் உள்ளங்களில் குடியேறியவர் முத்தமிழறிஞர் கலைஞர்!

# ரூ.500 கோடியில் பூந்தமல்லியில் நவீன திரைப்பட நகரம்!

## கலைஞர் நூற்றாண்டையொட்டி நடைபெற்ற ‘கலைஞர் – கலைஞர் 100’ திரைத் துறையின் கலை விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு !

**சென்னை, ஜன.8 -**

**தமது எழுத்தாற்றலாலும் பண்முகப்பட்ட படைப்பாற்றலாலும் ரசிகர்களின் உள்ளங்களில் குடியேறியவர் நம் தலைவர் கலைஞர் என்றும் பூந்தமல்லியில் ரூ.500 கோடியில் நவீன திரைப்பட நகரம் உருவாக்கப் படும் என்றும் நேற்று முன்தினம், கலைஞர் நூற்றாண்டையொட்டி, ‘கலைஞர் - கலைஞர் 100’ திரைத்துறையின் கலை விழாவில் உரையாற்றுகையில் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டார்.**

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (6.01.2024) சென்னை, கிண்டி, மெட்ராஸ் ரேஸ் மைதானத்தில் முத்தமிழறி ஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டையொட்டி நடைபெற்ற “கலைஞர் - கலைஞர் 100” திரைத்துறையின் மாபெரும் கலை விழாவில் ஆற்றிய உரை வருமாறு : -

நிகழ்ச்சியினை தமிழ்த் திரைப்படத் தயாரிப்பாளர்கள் சங்கம், தமிழ்த் திரைப்பட இயக்குநர்கள் சங்கம், தென்னிந்திய நடிகர் சங்கம், தென்னிந்திய திரைப்பட தொழிலாளர் சம்மேளனம், தமிழ்நாடு திரைப்பட நடப்பு விநியோகஸ்தர்கள் சங்கம், தமிழ்நாடு திரைப்பட திரையரங்க உரிமையாளர்கள் சங்கம், தமிழ்நாடு திரைப்பட Multiplex Association, இந்த சங்கங்கள் ஒன்று சேர்ந்து, இந்த இனிய நிகழ்ச்சியை மிகுந்த எழுச்சியோடு, ஏற்றத்தோடு, நாமெல்லாம் பெருமைப்படத்தக்க வகையில் கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கியிருக்கக்கூடிய பெருமதிப்பிற்குரிய சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் அவர்களே, என்னுடைய அன்பிற்கினிய கலைஞானி கமல்ஹாசன் உள்ளிட்ட திரையுலகத்தின் உடன்பிறப்புக்களே, பெரியோர்களே, தாய்மார்களே, நண்பர்களே, உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

நான் உரையாற்ற வரவில்லை. நன்றி கூற வந்திருக்கிறேன். அது தான் முறையாக இருக்கும்.

அப்பா, அம்மா வைத்த பெயரை கூட அழைக்காமல், ‘கலைஞர்‘ என்று தமிழ்நாட்டு மக்கள் அன்போடு அழைத்த ஒரு மாபெரும் தலைவர் நம்முடைய கலைஞர்.

**பட்டத்துக்கு முழுப் பொருத்தமானவர்!**

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் நம்முடைய உள்ளங்களில் நிறைந்து வாழ்ந்து கொண்டிருக்கிறார். தொண்டர்கள் கொடுத்த ‘தலைவர் ‘பட்டத்தை போலவே, நீங்கள் கொடுத்த ‘கலைஞர்‘ பட்டத்துக்கும் முழுப் பொருத்தமானவர் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள்! தலைவர் கலைஞர் என்று தான் தமிழ்நாடே அவரை அழைக்கிறது.

சூப்பர் ஸ்டார் முதல், தென்னிந்திய கலைஞர்கள் வரை இந்த விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஸ்டார்களை உருவாக்கும் கடைநிலைத் திரைக்கலைஞர்கள் வரை தலைவர் கலைஞருக்காக திரையுலகமே திரண்டு வந்திருக்கிறீர்கள்!

இங்கு கலைஞரின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடிக் கொண்டு இருக்கிறீர்கள். வாழ்ந்த காலத்தை போலவே, நிறைந்த பிறகும் நித்தமும் நினைக்கக் கூடியவராக தலைவர் கலைஞர் அவர்கள் விளங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

2018-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 7-ஆம் நாள்! தலைவர் கலைஞர் மறைந்த பிறகு தமிழ்நாடே கலங்கி நின்றது! எல்லாத் தரப்பினரும் கண்ணீரால் அஞ்சலி செலுத்தினார்கள். ஏற்கனவே, கோவையிலும் - சென்னையிலும் கலையுலகத்தினர் சார்பில் புகழஞ்சலிக் கூட்டங்கள் எல்லாம் நடந்தது.

**ஒரு அரசியல் இயக்கத்தின் தலைவராக, 50 ஆண்டுகள்! 5 முறை தமிழ்நாட்டின் முதலமைச்சர்! எந்த பொறுப்பை வகித்தாலும், தன்னுடைய படைப்புத் திறனை வெளிப்படுத்துவதில் அவர் குறைவைத்ததே கிடையாது. தன்னுடைய எழுத்தாற்றலாலும், பன்முகப்பட்ட படைப்பாற்றலாலும், ரசிகர்களின் உள்ளங்களில் குடியேறியவர் நம்முடைய தலைவர் கலைஞர்!**

**விழா கொண்டாடுவோருக்கு என் நெஞ்சார்ந்த நன்றி!**

எல்லாத் தரப்பு மக்களும், தொழிலதிபர்கள், டாக்டர்கள், ஆசிரியர்கள், வழக்கறிஞர்கள், நீதியரசர்கள் இப்படி எல்லாத் தரப்பு மக்களும் தலைவர் மறைந்த நேரத்திலே அவருக்கு புகழஞ்சலி செலுத்தியது ஒரு மிகப் பெரிய வரலாறு. அதற்கெல்லாம் மகுடம் சூட்டுவதுபோல, அவருடைய நூற்றாண்டு விழாவை இன்றைக்கு சீரும் சிறப்புமாக கலைத்துறை சார்ந்தவர்கள் கொண்டாடி இருக்கிறீர்கள்.

இதற்குக் காரணமான எல்லோருக்கும், அனைத்து அமைப்புகளுக்கும், அனைத்து நண்பர்களுக்கும் தமிழ்நாடு முதலமைச்சர் என்ற முறையிலும் மட்டுமல்ல, திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் என்ற அந்த முறையிலும் மட்டுமல்ல, தலைவர் கலைஞர் அவர்களின் மகன் என்ற அந்த முறையிலும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை நான் தெரிவித்துக் கொள்ள விரும்பு கிறேன்.

ஒரு அரசியல் இயக்கத்தின் தலைவராக, 50 ஆண்டுகள்! 5 முறை தமிழ்நாட்டின் முதல மைச்சர்! எந்த பொறுப்பை வகித்தாலும், தன்னுடைய படைப்புத் திறனை வெளிப்படுத்துவதில் அவர் குறை வைத்ததே கிடையாது. தன்னுடைய எழுத்தாற்றலாலும், பன்முகப்பட்ட படைப்பாற்றலாலும், ரசிகர்களின் உள்ளங்களில் குடியேறியவர் நம்முடைய தலைவர் கலைஞர்!

**உங்களில் ஒருவராகப் பயணித்தவர்!**

“வசனம் மு. கருணாநிதி” என்று இருந்தாலே படம் வெற்றியடையும். சினிமாவில் சான்ஸ் வாங்க கலைஞரின் வசனத்தை பேசி ஒப்புவிப்பது வழக்கம் ஆனது. அவரின் வசனப் புத்தகங்கள் அதிகமாக அச்சடிக்கப்பட்டு விற்பனை ஆனது. 1947-இல் முதல் படம் ராஜகுமாரி, 2011-இல் கடைசிப்படம் பொன்னர் - சங்கர். 65 ஆண்டுகளாக கலைத் துறையில் பயணம் செய்து “கலையினம் என்பது என் இனம்” என்று உங்களில் ஒருவராக இருந்த உங்களின் கலைஞருக்குத்தான் விழா எடுத்திருக்கிறீர்கள்.

அதனால்தான் கழகம் ஆட்சி அமையும் போதெல்லாம் கலைஞரும், திரைத்துறையினருக்கு ஏராளமான நலத் திட்டங்களை, சாதனைகளை படைத்திருக்கிறார். அந்த வழியில்தான், இப்போதைய கழக அரசும் திரைத்துறையினருக்குப் பல்வேறு திட்டங்களை தீட்டி வருகிறது.


**கோரிக்கைகளை செயல்படுத்தத் தயார்!**

எங்கள் குடும்பமே, கலைத் துறையைச் சார்ந்த குடும்பம் என்பது உங்களுக்கு எல்லாம் நன்றாக தெரியும். அந்த வகையில், நானும் உங்கள் கலைத்துறையைச் சார்ந்தவன்தான். இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சராக இருக்கும் உதயநிதி அவர்களும் சில மாதங்களுக்கு முன்பு வரை திரையு லகத்தில் கால்பதித்து நின்றவர்தான்.

எனவே, இந்த அமைச்சரவையும், கலைத் துறையினருக்கு நெருக்கமான அமைச்சரவைதான். உங்கள் கோரிக்கைகளை எப்போதும் செயல்படுத்தித் தரத் தயாராக இருக்கிறோம். அந்த அடிப்படையில் சில அறிவிப்புகளை, இந்த மேடையில் நான் வெளியிட விரும்புகிறேன்.

**பூந்தமல்லியில் நவீன திரைப்பட நகரம்!**

என்னுடைய தலைமையிலான நம்முடைய திராவிட மாடல் ஆட்சியில், எம்.ஜி.ஆர். பிலிம் சிட்டி 25 கோடி ரூபாய் மதிப்பீட்டில், நான்கு படப்பிடிப்புத் தளங்களாக விரைவில் அமைக்கப்பட இருக்கிறது. அதுமட்டுமல்ல, திரையுலகம் சார்பில், கலைஞானி கமல்ஹாசன் அவர்கள் நேராக வந்து என்னிடம் வைத்த கோரிக்கையை ஏற்று, நவீன திரைப்பட நகரம் (Modern Film City) பூந்தமல்லியில் 140 ஏக்கர் பரப்பளவில், 500 கோடி ரூபாய் மதிப்பில் அமைக்கப்பட இருக்கிறது.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (6.1.2024) சென்னை, கிண்டி, மெட்ராஸ் ரேஸ் கோர்ஸ் மைதானத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டையொட்டி நடைபெற்ற “கலைஞர் கலைஞர் 100 திரைத்துறையின் மாபெரும் கலை விழாவில் கலந்து கொண்டு, “நூற்றாண்டு கலை மலரை வெளியிட்டார். இவ்விழாவில், நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த், கலைஞானி கமல்ஹாசன், முன்னணி நடிகர்கள், நடிகர் சிவ ராஜ்குமார், தென்னிந்திய நடிகர் சங்கத்தின் துணைத் தலைவர் பூச்சி முருகன், தமிழ்த் திரைப்படத் தயாரிப்பாளர்கள் சங்கத் தலைவர் முரளி ராமநாராயணன், செயலாளர்கள் ஆர். ராதாகிருஷ்ணன் மற்றும் எஸ்.கதிரேசன், திரைப்பட இயக்குநர்கள், தயாரிப்பாளர்கள், நடிகர்கள், நடிகைகள், திரைத்துறையின் பல்வேறு சங்கங்களின் நிர்வாகிகள், திரைப்பட விநியோகஸ்தர்கள், திரையரங்க உரிமையாளர்கள், திரைப்படத் துறையின் தொழில்நுட்ப கலைஞர்கள் மற்றும் தொழிலாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அந்தத் திரைப்பட நகரத்தில் பெரிய L.E.D. Wall, நவீன தொழில்நுட்ப அம்சங்களான அனிமேஷன் மற்றும் VFX, Production மற்றும் Post Production பணிகள், 5 நட்சத்திர ஓட்டல் உள்ளிட்ட அனைத்து நவீன வசதிகளும் ஏற்படுத்தித் தரப் படும் என்று அறிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

தலைவர் கலைஞர் அவர்களுக்கு நூற்றாண்டு விழாவை வெகுசிறப்பாக நடத்திக்காட்டிய திரைத் துறையினருக்கு நான் மீண்டும் நன்றி சொல்கிறேன். நான் கொஞ்சம் காலம் கடந்து வந்தேன். அதுமட்டுமல்லாமல்,விரைவாகவும் செல்லவேண்டிய கட்டாயத்தில் இருக்கிறேன். காரணம், நாளையும், நாளை மறுநாளும் உலக முதலீட்டாளர்கள் மாநாடு நடைபெற இருக்கிறது. அதற்கான பணி காத்திருக்கிறது. அதனால் தான், வேக வேகமாக என்னுடைய உரையை நான் இங்கே ஆற்றி விடைபெற விரும்புகிறேன்.

இங்கே உரையாற்றிய நம்முடைய அருமை கலைத்துறை நண்பர்கள் எல்லோருக்கும் பல்வேறு தொழில்நுட்பக் கலைஞர்களுக்கும், தொழிலாளர் சங்கத்தினருக்கும் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினாக உங்கள் அத்தனை பேருக்கும் என்னுடைய நன்றி, நன்றி, நன்றி, நன்றி.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

# ‘தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியில் ஒரு பெரும் பாய்ச்சல்!’

## முதலீடுகள் குவிவது குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

**சென்னை, ஜன. 8-**

**உலகின் முன்னணி மின் வாகனத் தயாரிப்பு நிறுவனமான ‘வின் பாஸ்ட்’ நிறுவனம் ரூபாய் 16,000 கோடி முதலீட்டை மேற்கொள்ளவுள்ளது குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர் கள் தமது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிடும்போது, இதுவெறும் முதலீடல்ல; தென் தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியில் ஒரு பெரும் பாய்ச்சல் என்று பெருமிதம் பொங்க குறிப்பிட்டுள்ளார்.**

உலக முதலீட்டாளர்கள் மாநாட்டின் போது VinFast நிறுவனம் ரூ.16,000 கோடி முதலீட்டை மேற்கொள்ளவுள்ளது குறித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு :-

**உலகின் முன்னணி மின்வாகனத் தயாரிப்பு நிறுவனமான VinFast தமிழ்நாட்டில் தொழில் தொடங்குவதை உறுதிசெய்துள்ளது.**

**அனைவரது எதிர்பார்ப்புகளையும் விஞ்சி, 16,000 கோடி ரூபாய் மதிப்பில் தூத்துக்குடி யில் EV Car மற்றும் மின்கலன் உற்பத்தித் தொழிற்சாலையை VinFast நிறுவனம் அமைக்கவுள்ளது.**

**இது வெறும் முதலீடு அல்ல; தென்தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியில் ஒரு பெரும் பாய்ச்சல்!**

**தமிழ்நாட்டில் நடைபெறும் நல்லாட்சி மீதும், நம் மாநிலத்தின் ஆற்றல்மிகு மனிதவளத்தின் மீது நம்பிக்கை கொண்டு இந்தப் பெரும் முதலீட்டை மேற்கொள்ளும் VinFast நிறுவனத் தாருக்குத் தமிழ்நாட்டின் முதலமைச்ச ராக எனது மனமார்ந்த நன்றிகள்!**

**உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2024 இல் இன்னும் இதுபோன்ற பல வியத்தகு சாதனை அறிவிப்புகளைத் தொடர்ந்து எதிர்பார்த்திருங்கள்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பக்கத்தில் பெருமிதத்துடன் குறிப்பிட்டுள்ளார்.

# முதலீடுகளை ஈர்ப்பதில் இந்திய அளவில் தமிழ்நாடு முதலிடம்!

## முதல்வர் மு.க. ஸ்டாலின் உரை

முதல் பக்கத் தொடர்ச்சி...

மேற்கு ஆஸ்திரேலியா மற்றும் தைவான் பொருளாதார மற்றும் கலாச்சார நிறுவனங்களும் எங்களுடன் இணைந்து செயல்பட்டுள்ளார்கள். உங்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியை நான் தெரிவித்துக் கொள்கிறேன். பொருளாதார வளர்ச்சியில் அதிவிரைவுப் பாதையில் பயணித்துக் கொண்டிருக்கும் தமிழ்நாட்டிற்கு, கூடுதல் முதலீடுகளை ஈர்ப்பது மூலமாக, மேலும், தொழில் வளர்ச்சிக்கு இந்த மாநாடு வழிவகுத்துக் கொடுக்கும்! முன்னணி முதலீட்டாளர்கள், வணிக அமைப்புகள், நிதி நிறுவனங்கள் மற்றும் நிகழ்வில் கலந்து கொண்டிருக்கின்ற எல்லாருக்கும் இந்த மாநாடு மிகவும் பயனுள்ளதாக அமையும் என்று நான் உறுதியளிக்கிறேன்.

**அதிக முதலீடுகளை ஈர்த்து சாதனை படைத்துள்ளது தமிழ்நாடு!**

இந்த மாநாட்டில், நாங்கள் பல்வேறு சிறப்பம்சங்களை உங்களுக்கு அளிக்க இருக்கிறோம். தலைமைத்துவம் - Leadership, நீடித்த நிலைத்தன்மை - Sustainability, அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி - Inclusivity என்ற கருப்பொருள்களில் இந்த மாநாடு நடத்தப்படுகிறது. கடந்த இரண்டரை ஆண்டுகளாகவே, 'முதலீட்டாளர்களின் முதல் முகவரி மாநாடு தமிழ்நாடுதான்' என்று தமிழ்நாடு அங்கீகாரம் பெற்றிருக்கிறது. இந்த நிலையை மேம்படுத்துகின்ற வகையிலேயும், மாநிலத்தின் முதலீடு ஈர்ப்புத் திறனை உலகுக்கு வெளிப்படுத்தவும், இந்த உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை நடத்துகிறோம்.

நாங்கள் துறை வாரியாக மேற்கொண்ட முதலீட்டாளர்கள் மாநாட்டு சந்திப்பிற்கு நல்ல வரவேற்பு கிடைத்திருக்கிறது. அதில் பெருமளவு முதலீடுகளை ஈர்த்து சாதனைகளையும் படைத்திருக்கிறோம். உங்களையெல்லாம் காணும்போது, இந்த சாதனைகளையெல்லாம் விஞ்சக்கூடியதாக இந்த மாநாடு அமையப் போகிறது என்ற நம்பிக்கை பிறக்கிறது. தொழில்மயமாக்கல் வரலாற்றில், ஒரு மகத்தான அத்தியாயமாகவும் இந்த மாநாடு இருக்கப் போகின்றது.

இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியை வடிவமைப்பதில் தமிழ்நாடு முக்கியப் பங்காற்றவேண்டும் என்ற குறிக்கோளோடுதான், 2030-ஆம் ஆண்டுக்குள், தமிழ்நாட்டினுடைய பொருளாதாரத்தை, 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் அளவுக்கு உயர்த்தவேண்டும் என்று ஒரு இலட்சிய இலக்கை நான் நிர்ணயித்திருக்கிறேன். உயர் தொழில்நுட்பம் சார்ந்த தொழில் முதலீடுகளை ஈர்ப்பது,

**மூலதனம் நிறைந்த மின்னணுப் பொருட்கள் உற்பத்தி, மின்சார வாகனங்கள், சோலார் PV செல்கள் உற்பத்தி, பசுமை ஹைட்ரஜன், பெட்ரோலியப் பொருட்கள் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உள்ளிட்ட துறைகளையும், ஜவுளி மற்றும் ஆடைகள், காலணிகள் மற்றும் தோல் பொருட்கள், உணவு பதப்படுத்துதல் போன்ற வேலைவாய்ப்பு நிறைந்த துறைகளில் முதலீடுகள் மேற்கொள்ளப்பட இருக்கிறது. உலகம் முழுவதிலும் இருந்து 150-க்கும் மேற்பட்ட முன்னணி வல்லுநர்களும், தலைமையாளர்களும் பங்கேற்கின்ற கருத்தரங்குகள், புத்தாக்கம் தொடர்பான நிகழ்ச்சிகள், இளம் தலைவர்கள் வணிகத்தில் ஏற்படுத்தக்கூடிய மாற்றங்கள், மகளிர் தலைமையாளர்களின் குழு விவாதங்கள் போன்ற தலைப்புகளில் கருத்தரங்குகள் நடைபெறவுள்ளன.**

**எட்டு துறைகள் சார்ந்த பெரிய தொழிற்சாலைகள், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள், புத்தொழில் நிறுவனங்களுக்கான அரங்குகள் மற்றும் தமிழ்நாடு சூழலமைப்பு அரங்கம் என்று பல்வேறு விதமான அரங்குகள் அமைக்கப்பட்டிருக்கிறது. பன்னாட்டு அரங்குகள் அமைக்கப்பட்டு, பங்குதாரர் நாடுகள் தமிழ்நாட்டின் உடனான தங்களுடைய ஆழமான மற்றும் நீண்டகால ஈடுபாட்டை வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.**

மற்றும் வேலைவாய்ப்பு மிகுந்த முதலீடுகளை ஈர்ப்பது என்ற இருமுனை அணுகுமுறையை நாங்கள் மேற்கொண்டு வருகிறோம்.

ஒரு மாநிலத்தில், தொழில் முதலீடுகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்றால், அந்த மாநிலத்தின் ஆட்சி மேல் நல்லெண்ணம் இருக்கவேண்டும்! அங்கு சட்டம் - ஒழுங்கு நல்ல முறையில் பேணப்பட்டு, அமைதியான சூழல் நிலவவேண்டும்! ஆட்சியாளர்கள் மேல் உயர்மதிப்பு இருக்கவேண்டும்! அந்த மாநிலத்தின் உட்கட்டமைப்பு வசதிகள் சிறப்பாக இருக்கவேண்டும்! 2021-ல் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது முதல், இந்த அம்சங்களெல்லாம் தமிழ்நாட்டில் இருப்பதால்தான், தொழில் துறையில் ஏராளமான முதலீடுகள் குவிகிறது! முதலீட்டாளர்கள் என்ன எதிர்பார்க்கிறார்கள் என்று முன்கூட்டியே கணித்து, இன்றைய தமிழ்நாடு அரசு செயல்படுகிறது.

**திறமையான இளைய சக்தியை உருவாக்கும் தமிழ்நாடு அரசு!**

வணிகம் புரிதலை எளிதாக்கி வருகிறோம். திறன்மிகு பணியாளர்களை உருவாக்கி வருகிறோம். நாளைய தொழில் மாற்றங்களைக் கணித்து வைத்திருக்கிறோம். தொழிலகங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களிடையே இணைப்பினை ஏற்படுத்தி வருகிறோம். தொழிற்சாலைகளுக்கேற்ற தொழிலாளர்களை தயார்படுத்தி வருகிறோம். 'நான் முதல்வன்' திட்டம் மூலம் மாணவர்களுக்கு திறன் பயிற்சி அளித்து வருகிறோம். இளைஞர்களின் திறனுக்கேற்ற வேலைகளை உறுதி செய்து தருகிறோம். திறமையான இளைய சக்தியை உருவாக்கித் தருவதை நோக்கமாகக் கொண்டது, இன்றைய தமிழ்நாடு அரசு.

கல்வியிலும், வேலைவாய்ப்பிலும் பெண்களை முன்னிலைப்படுத்துவதில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக திகழ்கிறது. இந்தியாவின் முதல் பெண் மருத்துவர் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி தமிழ்நாட்டில் இருந்துதான் உருவானார்கள். தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞரின் அடியொற்றி, பெண்களுக்குச் சமூக, கல்வி, பொருளாதார, அரசியல்ரீதியாக அதிகாரமளிக்கின்ற திட்டங்கள், இந்தியாவுக்கே முன்னோடியாக செயல்படுத்திக் கொண்டு வருகிறோம்.

**பெண்கள் முன்னேற்றத்திற்கு அதிக முக்கியத்துவம் தருகிறோம்!**

பெண்களுக்கு பொருளாதார விடுதலை என்பது இந்த திராவிட மாடல் அரசின் முழக்கம்! அதனால்தான், "கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்" "புதுமைப் பெண் திட்டம்" "விடியல் பயணம்" "தோழி விடுதி" என்று அறிவித்து, பெண்கள் முன்னேற்றத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கிறோம்!

கடந்த இரண்டரை ஆண்டு ஆட்சிக்காலத்தில், பெருமளவிலான முதலீடுகள் ஈர்க்கப்பட்டதால், அதிக எண்ணிக்கையிலான வேலைவாய்ப்புகள் உருவாக்குகின்ற வகையில், 200-க்கும் மேற்பட்ட திட்டங்களுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

**தமிழ்நாடு ஏற்றுமதி மேம்பாட்டுக் கொள்கை,**

**தமிழ்நாடு மாநில குழந்தைகளுக்கான கொள்கை,**

**தமிழ்நாடு நிதிநுட்பக் கொள்கை,**

**தமிழ்நாடு தரவு மையக் கொள்கை,**

**தமிழ்நாடு உயிர் அறிவியல் மேம்பாட்டுக் கொள்கை,**

**தமிழ்நாடு காலணி மற்றும் தோல் பொருட்கள் கொள்கை,**

**தமிழ்நாடு விண்வெளி மற்றும் பாதுகாப்புக் கொள்கை,**

**தமிழ்நாடு மின்வாகனக் கொள்கை, செயற்கை மணல் (M-Sand) உற்பத்தியை ஒழுங்குப்படுத்துவதற்கான புதிய கொள்கை,**

**தமிழ்நாடு அங்கக வேளாண்மைக் கொள்கை,**

**தமிழ்நாடு எத்தனால் கொள்கை,**



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (7.1.2024) சென்னை வர்த்தக மையத்தில் நடைபெற்ற உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2024 தொடக்க விழாவில், கோத்ரெஜ் நிறுவனத்தின் தலைவர் திருமதி. நிசாபா கோத்ரெஜ் அவர்கள் சந்தித்து, கோத்ரெஜ் நிறுவனத்தின் சார்பில் மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு 5 கோடி ரூபாய்க்கான காசோலையை வழங்கினார். உடன் ஒன்றிய வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சர் பியுஷ் கோயல், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா ஆகியோர் உள்ளனர்.

**தமிழ்நாடு நகர எரிவாயு விநியோகக் கொள்கை,**

**தமிழ்நாடு சரக்கு போக்குவரத்துக் கொள்கை மற்றும் ஒருங்கிணைந்த சரக்கு போக்குவரத்து திட்டம்,**

**தமிழ்நாடு தொழில்நுட்ப ஜவுளி, மறுசுழற்சி செய்யப்பட்ட பொருட்களிலிருந்து செயற்கை இழை நூல், மற்றும் செயற்கை இழை துணி மற்றும் ஆடை தயாரிப்புகளுக்கான சிறப்பு திட்டம்,**

**தமிழ்நாடு பேரிடர் மேலாண்மை திட்டம் மற்றும் மாநில பேரிடர் மேலாண்மை கொள்கை,**

## பெண்களுக்கு பொருளாதார விடுதலை என்பது 'திராவிட மாடல்' அரசின் முழக்கமாகும்!

**தமிழ்நாடு சுற்றுலா கொள்கை,**

**தென்னை நார் கொள்கை**

எனப் பல்வேறு கொள்கைகள் வெளியிடப்பட்டிருக்கிறது.

**தமிழ்நாடு முழுவதும் சீரான வளர்ச்சியை ஏற்படுத்துவதே எங்கள் இலட்சியம்!**

தமிழ்நாடு முழுவதும் பரவலான மற்றும் சீரான வளர்ச்சியை ஏற்படுத்தவேண்டும் என்பதுதான் எங்களுடைய இலட்சியம்! அதனால்தான் தொழில் திட்டங்கள் எல்லாம் மாநிலம் முழுவதும் பரவலாக அமைக்கப்பட்டு வருகிறது! பல பின்தங்கிய மாவட்டங்களில், பெரும் அளவில், வேலைவாய்ப்பு உருவாக்குகின்ற விதமாக முதலீட்டுத் திட்டங்கள் ஈர்க்கப்பட்டிருக்கிறது. இதன் மூலம், அந்த மாவட்டங்களில் இருக்கின்ற இளைஞர்களுக்கும், மகளிர்களுக்கும் அவரவர்கள் வசிக்கின்ற மாவட்டங்களிலேயே வேலைவாய்ப்புகள் அளிக்கப்படுவது மட்டுமில்லாமல், அந்த மாவட்டங்களின் பொருளாதார வளர்ச்சியும் பெருமளவில் அதிகரித்து வருகிறது.

தமிழ்நாட்டில் ஏற்கனவே தங்களுடைய தொழில்திட்டங்களை அமைத்திருக்கிற பல நிறுவனங்கள், தங்களுடைய திட்டங்களை நன்றாக விரிவுபடுத்தியிருக்கிறார்கள் என்பது, தமிழ்நாட்டின் சிறப்பான தொழில் சூழலுக்கான அத்தாட்சி! மிகப்பெரும் தொழில் நிறுவனங்களான, ஹுண்டாய், டாடா போன்ற நிறுவனங்கள், தங்கள் முதலீடுகளை பன்மடங்கு அதிகரித்துள்ளன. 130-க்கும் மேற்பட்ட "Fortune 500" நிறுவனங்கள், தமிழ்நாட்டில் தங்களுடைய திட்டங்களை நிறுவியிருப்பது, தமிழ்நாட்டில் முதலீட்டுக்கான சிறந்த சூழல் அமைந்திருப்பதற்கு இது ஒரு சான்று! முதலீடுகளை ஈர்க்கின்ற மாநிலங்களில், இந்திய அளவில் தமிழ்நாடு முன்னணி நிலை வகிக்கிறது! உலக அளவிலான முதலீட்டாளர்களை நன்கு வரவேற்கும் மாநிலமாக அதாவது 'Most Welcoming State -ஆக தமிழ்நாடு இருக்கிறது.

**அனைத்துத் துறைகளிலும் திறன்மிகு பணியாளர்களைக் கொண்ட மாநிலம்!**

தமிழ்நாட்டைச் சேர்ந்த பணியாளர்கள் மிகவும் திறமையானவர்கள். முதலீட்டாளர்களுக்கு தேவையான அனைத்து சேவை ஆதரவுகளையும் தமிழ்நாடு அரசு அளித்து வருகிறது. அனைத்து துறைகளிலும் திறன்மிகு பணியாளர்களை இந்த மாநிலம் கொண்டுள்ளது. இந்த மாநாடு நடைபெறுகிற இரண்டு நாட்களிலும் பல்வேறு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட இருக்கிறது.

மூலதனம் நிறைந்த மின்னணுப் பொருட்கள் உற்பத்தி, மின்சார வாகனங்கள், சோலார் PV செல்கள் உற்பத்தி, பசுமை ஹைட்ரஜன், பெட்ரோலியப் பொருட்கள் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உள்ளிட்ட துறைகளையும், ஜவுளி மற்றும் ஆடைகள், காலணிகள் மற்றும் தோல் பொருட்கள், உணவு பதப்படுத்துதல் போன்ற வேலைவாய்ப்பு நிறைந்த துறைகளில் முதலீடுகள் மேற்கொள்ளப்பட இருக்கிறது. உலகம் முழுவதிலும் இருந்து 150-க்கும் மேற்பட்ட முன்னணி வல்லுநர்களும், தலைமையாளர்களும் பங்கேற்கின்ற கருத்தரங்குகள், புத்தாக்கம் தொடர்பான நிகழ்ச்சிகள், இளம் தலைவர்கள் வணிகத்தில் ஏற்படுத்தக்கூடிய மாற்றங்கள், மகளிர் தலைமையாளர்களின் குழு விவாதங்கள் போன்ற தலைப்புகளில் கருத்தரங்குகள் நடைபெறவுள்ளன.

எட்டு துறைகள் சார்ந்த பெரிய தொழிற்சாலைகள், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள், புத்தொழில் நிறுவனங்களுக்கான அரங்குகள் மற்றும் தமிழ்நாடு சூழலமைப்பு அரங்கம் என்று பல்வேறு விதமான அரங்குகள் அமைக்கப்பட்டிருக்கிறது. பன்னாட்டு அரங்குகள் அமைக்கப்பட்டு, பங்குதாரர் நாடுகள் தமிழ்நாட்டின் உடனான தங்களுடைய ஆழமான மற்றும் நீண்டகால ஈடுபாட்டை வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

**புத்தொழில்களுக்கென்று தனி மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது!**

கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களுடன் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் மேற்கொண்டு, 3000-க்கும் மேற்பட்ட மாணவர்கள் உள்பட, எதிர்கால சந்ததியினரை இம்மாநாட்டிற்கு ஈர்த்துள்ளோம். புத்தொழில்களுக்கென்று ஒரு தனி மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. வளர்ந்து வரும் முதலீட்டாளர்கள், இந்தத் துறை சார்ந்த நிபுணர்களுடன் கலந்துரையாடுவார்கள்! குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் சார்பில் 'வாங்குவோர் - விற்பனையாளர் சந்திப்பு' ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

இது மூலமாக 20-க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த ஏற்றுமதியாளர்கள், 500-க்கும் மேற்பட்ட உள்நாட்டு விற்பனையாளர்களுடன் கலந்துரையாடுவார்கள்! உலகம் முழுவதும் இருக்கின்ற முதலீட்டாளர்களுடன் தொடர்பு கொண்டு, அவர்களது முதலீடுகளை நாங்கள் கோரியுள்ளோம்.

கடந்த இரண்டரை ஆண்டுகளாக, முதலீட்டாளர்களுக்கு சிவப்புக் கம்பளம் விரித்து, தமிழ்நாட்டில் தொழில் தொடங்க அழைப்பு விடுத்து வருகிறோம். அனைத்துத் துறைகளிலும், தமிழ்நாட்டை நாங்கள் முதன்மை பெறச் செய்ய வேண்டும் என்று உறுதி கொண்டிருக்கிறோம். அது மட்டுமல்ல, மற்ற மாநிலங்களுக்கு

**கடந்த இரண்டரை ஆண்டுகளாக, முதலீட்டாளர்களுக்கு சிவப்புக் கம்பளம் விரித்து, தமிழ்நாட்டில் தொழில் தொடங்க அழைப்பு விடுத்து வருகிறோம். அனைத்துத் துறைகளிலும், தமிழ்நாட்டை நாங்கள் முதன்மை பெறச் செய்ய வேண்டும் என்று உறுதி கொண்டிருக்கிறோம். அது மட்டுமல்ல, மற்ற மாநிலங்களுக்கு முன்னுதாரண மாகவும் திகழ வேண்டும் என்பதே எங்களது இலட்சியம்! இந்த முயற்சிகளுக்கு மகுடம் சூட்டிடும் வகையிலும், முதலீடுகளை ஈர்ப்பதில் தமிழ்நாட்டின் வலிமையை உலகிற்குத் தெரிய வைத்திடும்!**

முன்னுதாரணமாகவும் திகழ வேண்டும் என்பதே எங்களது இலட்சியம்! இந்த முயற்சிகளுக்கு மகுடம் சூட்டிடும் வகையிலும், முதலீடுகளை ஈர்ப்பதில் தமிழ்நாட்டின் வலிமையை உலகிற்குத் தெரிய வைத்திடும்!

**தமிழ்நாட்டில் முதலீடு செய்ய வாருங்கள் என மனதார அழைக்கிறேன்!**

இங்கு கூடியிருக்கும் முதலீட்டாளர்களாகிய உங்கள் மத்தியில் உரையாற்றுவது உள்ளபடியே எனக்கு மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது. தொழில்துறையில் பெரும் சாதனை படைத்த அனுபவசாலிகள் இந்த அரங்கில் நிறைந்துள்ளீர்கள். இங்கு பல ஆண்டுகளாக தொழில் புரியும் அனுபவமும் உங்களுக்கெல்லாம் உள்ளது. சுருங்கச் சொன்னால், உங்களையும், உங்கள் வணிகத்திட்டங்களையும், உலகளாவிய முதலீட்டாளர்களோடு இணைத்துக் கொள்ளும் பொன்னான வாய்ப்பினை நாங்கள் இந்த மாநாடு மூலமாக ஏற்படுத்தித் தந்துள்ளோம்.

தமிழ்நாட்டில் முதலீடு செய்யுங்கள்! அனைவரும் சேர்ந்து எதிர்காலத்தை பகிர்ந்து கொள்வோம் வாருங்கள்! ஒட்டுமொத்த தமிழ்நாட்டின் கனவை நனவாக்குவோம் வாருங்கள் என மனதார அழைப்பு விடுக்கிறேன்.

**தமிழ்நாட்டின் முன்னேற்றம் இந்தியாவின் வளர்ச்சி!**

இந்த மாநாட்டினால் தமிழ்நாட்டின் பொருளாதாரம் வளரும்! அதன்மூலம் இந்தியப் பொருளாதாரமும் உயரும்! அன்புக்குரிய முதலீட்டாளர்களே, உலகத்தின் பல நாடுகளிலிருந்து, அமைதியில் சிறந்த, முதலீட்டாளர்களின் நண்பனாக திகழுகிற தமிழ்நாட்டில் முதலீடு செய்து, தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்க வந்து இருக்கிறீர்கள். என் தலைமையிலான தமிழ்நாடு அரசு, உங்களுக்கு அனைத்து வகையிலும், உறுதுணையாக இருக்கும்! உங்களுடைய உணர்வுகளை மதிக்கும்! தொழில் தொடங்க அனைத்து உதவிகளையும் செய்யும்! ஏனென்றால், இது, "சொன்னதை செய்வோம்! செய்வதை சொல்வோம்!" என்ற ஆட்சி நடத்துகின்ற திராவிட மாடல் அரசு!

வாருங்கள்... முதலீடு செய்யுங்கள்... தமிழ்நாட்டின் முன்னேற்றத்திலும், இந்தியாவின் வளர்ச்சியிலும் உங்கள் பங்களிப்பை தாராளமாக வழங்குங்கள் என்று அன்புடன் அழைக்கிறேன்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

## முதல்வர் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்!

முதல் பக்கத் தொடர்ச்சி

கோச்சி மாகாண ஆளுநர் ஹமாதா செய்ஜி, இந்திய தொழில் கூட்டமைப்பின் தேசியத் தலைவர் ஆர்.தினேஷ், ஓலா எலக்ட்ரிக் நிறுவனத்தின் நிறுவனர் மற்றும் தலைமை செயல் அலுவலர் பவிஷ் அகர்வால், கோத்ரெஜ் நிறுவனத்தின் தலைவர் திருமதி. நிசாபா கோத்ரெஜ், டி.வி.எஸ் நிறுவனத்தின் தலைவர் எமரிட்டஸ் வேணு ஸ்ரீநிவாசன் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினார்கள்.

மேலும், ரிலையன்ஸ் நிறுவனத்தின் தலைவர் முகேஷ் அம்பாணி அவர்கள் காணொலி வாயிலாக உரையாற்றினார். தமிழ்நாடு அரசு தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, இந்நிகழ்வில் கலந்துகொண்ட அனைவருக்கும் நன்றியினை தெரிவித்தார்.

**மாநாட்டின் சிறப்பு அம்சங்கள்**

இம்மாநாடு தொழில் வளர்ச்சியில் தமிழ்நாட்டின் தலைமைத்துவம், அதன் நிலைத்தன்மை மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி (Leadership, Sustainability and Inclusivity) ஆகிய கருப்பொருட்களை கொண்டு நடத்தப்படுகிறது. இம்மாநாட்டில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கும் அதன் வாடிக்கையாளர்களுக்குமான ஒரு பிரத்யேக சந்திப்பு (Buyer - Seller Meet) நடைபெற உள்ளது. அச்சந்திப்பில் பல நாடுகளைச் சேர்ந்த ஏற்றுமதியாளர்களுக்கும், உள்நாட்டு விற்பனையாளர்களுக்குமிடையேயான கலந்துரையாடல்கள் நடைபெற உள்ளன. அனுபவம் பகிர்வு உரையாடல்களும், பலதுறை சார்ந்த வல்லுநர்கள் கலந்துகொள்ளும் கருத்தரங்கங்களும் நடைபெற உள்ளன. தொழில் நிறுவனங்களின் அரங்குகள், பன்னாட்டு அரங்குகள், புத்தொழில்களு க்கான அரங்குகள் மற்றும் தமிழ்நாடு தொழில் சூழலமைப்பு அரங்கம் ஆகியவை பிரம்மாண்டமாக அமைக்கப்பட்டுள்ளன.

இம்மாநாட்டில், அமெரிக்கா, இங்கிலாந்து, ஜப்பான், ஆஸ்திரேலியா, பிரான்ஸ், ஜெர்மனி, டென்மார்க், சிங்கப்பூர் மற்றும் தென்கொரியா ஆகிய 9 நாடுகள் பங்குதாரர் நாடுகளாகவும், மேற்கு ஆஸ்திரேலியா மற்றும் தைவான் பொருளாதார மற்றும் கலாச்சார மையமும் தமிழ்நாடு அரசுடன் இணைந்து செயல்படுகிறார்கள்.

தமிழ்நாட்டின் மேம்பட்ட தொழில் சூழல் மற்றும் மனித வளம் ஆகியவற்றை உலகளாவிய முதலீட்டாளர்களுக்கு அறியப்படுத்தி புதிய தொழில் முதலீடுகளை அதிக அளவில் ஈர்க்கும் வகையில் இம்மாநாடு அமைந்துள்ளது.

இந்த நிகழ்வில், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், பன்னாட்டு தூதரக அதிகாரிகள், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி. அருண் ராய், வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் வே. விஷ்ணு, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களின் தலைவர்கள் / தலைமை செயல் அலுவலர்கள், தொழில்துறை வல்லுநர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## இந்திய ஒன்றியத்திற்கு – விளையாட்டுத்துறையிலும்

# திராவிட மாடல் அரசு ஒரு வழிகாட்டியாகத் திகழ்கிறது!

## கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகளின் விளம்பர ஊர்தியை கொடியசைத்து துவக்கி வைத்து அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு!

**சென்னை, ஜன. 8 -**

**இந்திய ஒன்றியத்திற்கு விளையாட்டுத் துறையிலும் திராவிட மாடல் அரசு ஒரு வழிகாட்டியாகத் திகழ்கிறது என்று கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகளின் விளம்பர ஊர்தியை கொடியசைத்து துவக்கி வைத்து அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரையாற்றுகையில் தெரிவித்தார்.**

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (06.01.2024) சென்னை, மெரினா கலங்கரை விளக்கம் அருகில் ‘கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டு போட்டிகள் 2023,’ விளம்பரப் படுத்தும் விதமாக விளம்பர ஊர்தியை கொடியசைத்து துவக்கி வைத்தார்.

இதனை தொடர்ந்து, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு துறை மற்றும் டி.ஜி. வைஷ்னவ கல்லூரி தொடர்பியல் துறையுடன் இணைந்து கடந்த ஒரு வருடத்தில் விளையாட்டு துறையில் நடைபெற்ற பல்வேறு நிகழ்வுகளின் விவரங்களை உள்ளடக்கிய கையேட்டை வெளியிட்டார்.

*இந்நிகழ்ச்சியில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசியதாவது:*

முதன் முறையாக தமிழ்நாட்டில் நடைபெற உள்ள கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டு போட்டியையொட்டி விளம்பர வாகனத்தை கொடியசைத்து தொடங்கி வைப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்ற கழக அரசு அமைந்த முதல் விளையாட்டு துறை புது எழுச்சியை பெற்றுள்ளது. எண்ணற்ற சாதனைகள், ஏராளமான உயரங்கள் என மற்ற துறைகளை போலவே விளையாட்டு துறையும் முன்னேற்றம் கண்டுள்ளது. விளையாட்டு துறையிலும் நமது திராவிட மாடல் அரசு இந்திய ஒன்றியத்துக்கு ஒரு வழிகாட்டியாக திகழ்கிறது. இதற்கு உதாரணமாக 6வது கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டு போட்டியை முதல்முறையாக தமிழ்நாட்டில் வரும் 19ம் தேதி முதல் 31ம் தேதி வரை நடத்த உள்ளோம்.

எப்படி 44வது செஸ் ஒலிம்பியாட் போட்டியை இந்தியா மட்டும் அல்ல உலகமே வியந்து பார்க்கும் வகையில் நடத்தினோம். அதேபோன்று முதல்வர் அவர்களின் வழிகாட்டுதலின்படி கேலோ இந்தியா விளையாட்டு போட்டியையும் மிகச் சிறப்பாக நடத்தி முடிக்க அனைத்து ஏற்பாடுகளையும் செய்து வருகிறோம். இந்த தேசிய அளவிலான போட்டியை தமிழ்நாடு இந்திய ஒன்றியம் முழுவதும் கொண்டு செல்லும் விதமாக தொடர்ந்து பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறோம்.



சென்னை மெரினா கடற்கரை கலங்கரை விளக்கம் அருகில் நேற்று முன்தினம் (06.01.2024) இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஜனவரி 19 முதல் 31 தேதி வரை நடைபெறவுள்ள கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டு போட்டிகள் 2023–க்கான விளம்பர ஊர்தியை (Canter) கொடியசைத்து துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் சென்னை பெருநகர மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்யா மிஸ்ரா. நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாநிதி மாறன், டாக்டர் கலாநிதி வீராசாமி, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, கூடைப்பந்து வீரர் ஜீவானந்தம், வாள்வீச்சு வீராங்கனை மரியா அக்ஷிதா ஆகியோர் உடனிருந்தனர்.

தமிழ்நாட்டில் இன்று விளம்பர வாகன பயணம் தொடக்க நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்று வருகிறது. தமிழகத்தில் சென்னை, கோவை, திருச்சி, மதுரை ஆகிய 4 நகரங்களில் கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டு போட்டி நடைபெற உள்ளது. இதன் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில்தான் இந்த 4 வாகனங்கள் உருவாக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டின் பெருமையை பிரதிபலிக்கும் வீரமங்கை வேலுநாச்சியார் சின்னம், இலச்சினை மற்றும் சுடர், இந்த பிரச்சார வாகனத்துடன் தமிழகம் முழுவதும் பயணிக்க உள்ளது.

இந்த வாகனங்கள் ஒவ்வொரு மாவட்டத்தில் உள்ள பள்ளிகள், கல்லூரிகள், சுற்றுலா தலங்களுக்கு செல்ல உள்ளது. இந்த வாகன வருகையின் போது மாவட்டம் தோறும் அமைச்சர்கள், மக்களவை உறுப்பினர்கள், சட்ட மன்ற உறுப்பினர்கள், மாவட்ட ஆட்சியர்கள் மாணவர்கள், விளையாட்டு வீராங்கனைகள், பொதுமக்கள் பங்கேற்கும் நிகழ்ச்சி நடைபெற உள்ளது. மேலும் வாகனம் செல்லும் இடங்களில் மினி மாரத்தான் போட்டிகள் மற்றும் வாகன பேரணியும் நடைபெறவுள்ளது.

மாணவர் கவனத்தை ஈர்க்கும் வகையில் திருக்குறள் ஒப்புவித்தல் போட்டி, கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டு போட்டிக்கான லோகோ வரைதல் போட்டி, வீரமங்கை இலட்சினையை முன்னிறுத்தி வேலு நாச்சியார் குறித்த கட்டுரை போட்டிகளும் நடைபெற உள்ளது. இந்த வாகனங்கள் செல்லும் இடங்களில் ஒவ்வொரு நாளும் திருவிழா போன்று இருக்கும். விளையாட்டு துறையின் முன்னேற்றத்துக்காக கழக அரசு எடுத்து வரும் நடடிவடிக்கையின் காரணமாக ஏராளமான அங்கீகாரங்கள் தமிழ்நாட்டிற்கு கிடைத்து வருகின்றன.

சமீபத்தில் கான்பெடரஷேன் ஆஃப் இந்தியன் இன்டஸ்ட்ரீஸ் (CII) சார்பில் தமிழ்நாட்டிற்கு விளையாட்டு துறையை முன்னேற்றி வருவதற்கான உயரிய விருது வழங்கியுள்ளது. செஸ் என்றால் சென்னை, சென்னை என்றால் செஸ் என்று கூறும் அளவுக்கு கடந்த மாதம் சென்னை கிராண்ட் மாஸ்டர் தொடர் நடத்தப்பட்டது . முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டி, ஆசிய சாம்பியன்ஸ் கோப்பை, ஸ்குவாஷ் உலகக் கோப்பை, உலக சர்பிங் லீக், ஹெச்சிஎல் சைக்கிளத்தான், தேசிய ஜூனியர் ஹாக்கி என ஏராளமான போட்டிகளை தொடர்ந்து நடத்தி வருகிறோம்.

சர்வதேச மற்றும் தேசிய அளவிலான விளையாட்டு போட்டிகளை நடத்துவது மட்டும் அல்லது அதுபோன்ற போட்டிகளில் தமிழகத்தைச் சேர்ந்த வீரர்கள், வீராங்கனைகள் வெற்றி பெற உறுதுணையாக இருந்து வருகிறது. விளையாட்டு வீரர்களுக்கு பொருளாதாரம் ஒரு தடையாக இருக்கக்கூடாது என்பதற்காகத்தான் தமிழ்நாடு முதலமைச்சர் தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளையை தொடங்கி வைத்தார்கள். மேலும் அவரது சொந்த நிதியில் இருந்து 5 லட்சம் ரூபாய் வழங்கினார்.

இந்த அறக்கட்டளை வாயிலாக தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை மூலம் நூற்றுக்கும் மேற்பட்ட வீரர், வீராங்கனைகளுக்கு ரூ.4 கோடி அளவுக்கு நிதி உதவி வழங்கியுள்ளனர். இதன் பலனாக இதுவரை இல்லாமல் சீனாவில் முடிவடைந்த 19வது ஆசிய விளையாட்டு போட்டியில் 48 தமிழ்நாட்டு வீரர்கள் 28 பதக்கம் குவித்து சாதனை படைத்துள்ளனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ரூ.9.40 கோடி உயரிய ஊக்க தொகை அரசு சார்பாக வழங்கப்பட்டுள்ளது. குத்துச்சண்டை, வாள் வீச்சு, ரோலர் ஸ்கேட்டிங் ஆகியவற்றில் தேசிய, சர்வதேச அளவில் சாதித்த தமிழ்நாடு வீரர், வீராங்கனைகளுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மூலம் ரூ.5 கோடி உயரிய ஊக்க தொகை வழங்கப்பட்டுள்ளது. தேசிய சீனியர் மகளிர் கால்பந்து போட்டியில் தங்கம் வென்ற தமிழக அணிக்கு ரூ.60 லட்சம் ஊக்க தொகை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது. உலகக் கோப்பை செஸ் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்ற பிரக்ஞானந்தாவுக்கு ரூ.30 லட்சம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது.

வீரர், வீராங்கனைகளுக்கும் நாம் தொடர்ந்து அளித்து வரும் முக்கியத்துவத்தின் காரணமாக ஜெர்மன், சீனா போன்ற நாடுகளில் நடைபெற்ற சர்வதேச போட்டிகளில் மாற்றுத்திறனாளிகளும் பங்கேற்று பதக்கங்களை குவித்து வருகிறார்கள்.

ஒடிசா மாநில வீரர்கள் தமிழகத்திலும், தமிழக வீரர்கள் ஒடிசாவிலும் பயிற்சி பெற புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அத்துடன் பாட்மிண்டன் வீரர்களை உருவாக்கும் விதமாக ஜூவாலா கட்டா அகாடமியுடன் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன்படி 28 வீரர்கள் ஹைதராபாத்தில் பயிற்சி பெற்று வருகின்றனர்.

சர்வதேச தரத்தில் குலோபல் ஸ்போர்ட்ஸ் சிட்டி தொகுதி தோறும் மினி ஸ்டேடியம் மாற்றுத்திறனாளிகளுக்கு பிரத்யேக வசதிகள் கொண்ட விளையாட்டு அரங்கம் போன்ற திட்டங்களை திராவிட மாடல் அரசு எடுத்துக் கொண்டு வருகிறது.

12 வருடத்திற்கு பிறகு 76 பயிற்சியாளர்களை வெளிப்படையாக தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் நியமித்துள்ளது. ஒன்றிய அரசின் சார்பில் வழங்கப்படும் உயரிய விருதுகளை தமிழ்நாட்டை சேர்ந்த செஸ் வீராங்கனை வைஷாலி, ஸ்குவாஷ் வீரர் ஹரிந்தரபால் ஆகியோர் பெற்றனர். சிறந்த பயிற்சியாளர்களுக்கான விருதுகளை செஸ் பிரிவில் ரமேஷ், கபடி பயிற்சியாளர் விருதை கவிதா செல்வராஜ் ஆகியோர் பெற்றுள்ளனர். இவ்வளவு பெரிய சாதனைகளுக்க நடுவே தான் கேலோ இந்தியா விளையாட்டுப் போட்டியை நடத்தவுள்ளளோம்.

நாட்டின் அனைத்து மாநிலங்களின் இருந்து சுமார் 6000 விளையாட்டு வீரர், வீராங்கனைகள் பங்கேற்கும் விளையாட்டுகள் என கோலாகலமாக நடைபெற உள்ளது. போட்டிக்கு முன்பாக சென்னை நேரு மைதானம் ரூ.10 கோடி செலவில் சீரமைக்கப்பட்டுள்ளது.

கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டு போட்டியின் துப்பாக்கி சுடு தளம் இரண்டு வாரங்களுக்கு முன்புதான் வேளச்சேரி கல்லூரியில் திறந்து வைத்தேன். இந்த போட்டியில் மூலம் தேசிய மற்றும் சர்வதேச வீரர்களை அடையாளம் காண உள்ளோம் என்று பேசினார்

இந்நிகழ்ச்சியில் சென்னை பெருநகர மாநகராட்சி மேயர் திருமதி.ஆர். பிரியா, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாநிதி மாறன், டாக்டர். கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் த.வேலு, ஜோசப் சாமுவேல், ஜே.ஜே. எபினேசர், சென்னை பெருநகர மாநகராட்சி துணை மேயர் எம்.மகேஷ் குமார், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, கூடைப்பந்து வீரர் ஜீவானந்தம், வாள் வீச்சு வீராங்கனை மரியா அக்ஷிதா மற்றும் விளையாட்டு வீரர் வீராங்கனைகள் கலந்து கொண்டனர்.

## கேலோ இந்தியா இளையோர் விளையாட்டு விளம்பர ஊர்திகள் பயணிக்கும் இடங்களின் விபரம்:

| வ. எண். | தேதி | வாகனம் 1 (மதுரை) | வாகனம் 2 (திருச்சி) | வாகனம் 3 (கோயம்புத்தூர்) | வாகனம் 4 (கோயம்புத்தூர்) | வாகனம் 5 (சென்னை) |
|---|---|---|---|---|---|---|
| 1. | ஜனவரி 08 | மதுரை | திருச்சி | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் | நேரு பூங்கா விளையாட்டு வளாகம் |
| 2. | ஜனவரி 09 | சிவகங்கை | புதுக்கோட்டை | நீலகிரி | திருப்பூர் | தலைமைச் செயலகம் |
| 3. | ஜனவரி 10 | இராமநாதபுரம் | தஞ்சாவூர் | ஈரோடு | கரூர் | மெரினா கடற்கரை |
| 4. | ஜனவரி 11 | தூத்துக்குடி | திருவாரூர் | சேலம் | நாமக்கல் | சிட்டி மால் |
| 5. | ஜனவரி 12 | கன்னியாகுமரி | நாகப்பட்டினம் | தருமபுரி | கள்ளக்குறிச்சி | ஜெமினி மேம்பாலம் |
| 6. | ஜனவரி 13 | திருநெல்வேலி | மயிலாடுதுறை | கிருஷ்ணகிரி | விழுப்புரம் | செனடாஃப் சாலை |
| 7. | ஜனவரி 14 | தென்காசி | அரியலூர் | திருப்பத்தூர் | திருவண்ணாமலை | கோட்டூர்புரம் |
| 8. | ஜனவரி 15 | விருதுநகர் | பெரம்பலூர் | வேலூர் | காஞ்சிபுரம் | அண்ணா பல்கலைக் கழகம் |
| 9. | ஜனவரி 16 | தேனி | கடலூர் | இராணிப்பேட்டை | சென்னை (இடம் முடிவாகவில்லை) | தரமணி |
| 10. | ஜனவரி 17 | திண்டுக்கல் | செங்கல்பட்டு | திருவள்ளூர் | சென்னை (இடம் முடிவாகவில்லை) | பெசன்ட் நகர் கடற்கரை |
| 11. | ஜனவரி 18 | – | சென்னை (இடம் முடிவாகவில்லை) | சென்னை (இடம் முடிவாகவில்லை) | சென்னை (இடம் முடிவாகவில்லை) | அடையாறு |
| 12. | ஜனவரி 19 | ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம், சென்னை | ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம், சென்னை | ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம், சென்னை | ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம், சென்னை | ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம், சென்னை |


செய்தி - மக்கள் தொடர்புத்துறை
கலைஞர் 100 1924 - 2023

**தமிழ்த் திரையுலகில் சிறந்து விளங்கிய வாழ்நாள் சாதனையாளர்கள்**
**“கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருது”க்கு விண்ணப்பிக்கலாம்.**

“**கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர்**” விருது ஒவ்வொரு ஆண்டும் அவரது பிறந்த தினமான ஜுன் 3-ஆம் நாளன்று வழங்கப்படுகிறது. “**கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர்**” விருதுக்கு தேர்வு செய்யப்படும் விருதாளருக்கு ரூ.10,00,000/- (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) பரிசுத் தொகையுடன், பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்படும். “**கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர்**” விருது 2023-ஆம் ஆண்டிற்கு கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, பெண்மையை போற்றுகின்ற வகையில் சிறப்பினமாக இவ்வாண்டு மட்டும் கூடுதலாக ஒரு பெண் திரைக்கலைஞர் தேர்வு செய்யப்பட உள்ளார். அவ்வகையில், “**கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர்**” விருதுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

**விருதிற்கான தகுதிகள் பின்வருமாறு:** (i). நடிகர், நடிகையர், இயக்குநர், தயாரிப்பாளர், கதையாசிரியர், உரையாடலாசிரியர், இசையமைப்பாளர், பாடலாசிரியர், பின்னணிப் பாடகர் மற்றும் பாடகி, ஒளிப்பதிவாளர், படத்தொகுப்பாளர், கலை இயக்குநர், ஒலிப்பதிவாளர், சண்டைப் பயிற்சியாளர், நடன ஆசிரியர், ஒப்பனைக் கலைஞர் மற்றும் தையற் கலைஞர் என தமிழ்த் திரைத் துறையைச் சார்ந்தவர்கள் விண்ணப்பிக்க தகுதி வாய்ந்தவராகக் கருதப்படுவர். (ii). விண்ணப்பத்தாரர் தமிழ்த் திரையுலகில் சிறந்து விளங்கிய வாழ்நாள் சாதனையாளராக இருந்திட வேண்டும். (iii). கலைத்துறையில் குறைந்தது ஐம்பது ஆண்டுகள் சேவை புரிந்திருக்க வேண்டும். (iv). தமிழ்த் திரைப்பட உலகிற்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை ஆற்றியவர் அடங்குவர். (v). சமுதாயத்திற்கு கதைகள், வசனங்கள் மற்றும் பாடல்கள் மூலம் நல்ல கருத்துக்களை எடுத்துச் சொன்னவராக இருத்தல் வேண்டும். (vi). சமுதாயத்தை முன்னேற்றும் நோக்கில் நல்ல கருத்துக்களை கொண்டு படங்களை தயாரித்தவர்கள். (vii). நாடகங்களை தழுவி தயாரிக்கும் திரைப்படங்கள், நூல்கள் மற்றும் சொந்த கற்பனை தகவல்களை வைத்து திரைக்கதை தயாரித்தவர்கள். (viii). மொழி மாற்றம் செய்யப்பட்ட படங்கள் மட்டுமே எழுதியவர்கள் தகுதியுடையவர்களாக கருதப்பட மாட்டார்கள்.

மேற்கண்ட விருதிற்கு விண்ணப்பிப்பவர்கள் விரிவான விவரங்கள் மற்றும் அவற்றுக்குரிய ஆவணங்களுடன் உறுப்பினர்/செயலாளர், திரைப்படத் துறையினர் நலவாரியம் முதல் தளம், மாநில செய்தி நிலையம், கலைவாணர் அரங்க வளாகம், வாலாஜா சாலை, சென்னை - 600 002 என்ற முகவரிக்கு 08.01.2024 முதல் 06.02.2024 அன்று மாலை 5.00 மணிக்குள் விண்ணப்பங்கள் வந்து சேருமாறு அனுப்பி வைக்கப்படவேண்டும்.

**இயக்குநர்,**
செய்தி - மக்கள் தொடர்புத்துறை,
சென்னை- 600 009.

செ.ம.தொ.இ/15/வரைகலை/2024

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in



மேற்கு தொடர்ச்சி மலை பன்றிமலையில் ரூ.1 கோடியே 25 லட்சம் மதிப்பில் கட்டப்பட்டு வரும் மருத்தவமனையை அமைச்சர் ஐ.பெரியசாமி ஆய்வு செய்தார். அருகில் திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் மொ.ந.பூங்கொடி,திட்டஇயக்குநர் திலகவதி, திண்டுக்கல் எம்.பி. ப.வேலுச்சாமி, ஒன்றிய பெருந்தலைவர் ப.க.சிவகுருசாமி, திண்டுக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. பொருளாளர் சத்திய மூர்த்தி உட்பட பலர் உள்ளனர்.

திண்டுக்கல் மாவட்டம்

# மாங்கரை ஊராட்சியில் நியாய விலைக்கடை - அங்கன்வாடி மையம்!

## ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி திறந்து வைத்தார்!

திண்டுக்கல், ஜன. 8 -

ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் இ.பெரியசாமி திண்டுக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் ப.வேலுச்சாமி முன்னிலையில் திண்டுக்கல் மாவட்டம், மாங்கரை ஊராட்சியில் புதிய நியாய விலைக்கடை, தருமத்துப் பட்டி ஊராட்சி டி.புதுாரில் புதிய அங்கன்வாடி மையம் ஆகியவற்றைத் திறந்து வைத்தார்.

எம்.அம்மாபட்டி, மாங்கரை, கோனுார், கசவனம் பட்டி, கரிசல்பட்டி, தருமத்துப்பட்டி ஆகிய ஊராட்சிகளில் பொதுமக்களிடம் இருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டார்.

இந்நிகழ்ச்சியில் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் தெரிவித்ததாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தமிழக மக்களின் நலனுக்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து, அதன் பயன்கள் அனைத்துத் தரப்பு மக்களையும் சென்றடையும் வகையில் செயல்படுத்தி வருகிறார். திண்டுக்கல் மாவட்டத்தில் தடுப்பணைகள், மேல்நிலை குடிநீர் தொட்டிகள், சாலை மேம்பாட்டுப் பணிகள், கழிவுநீர் வாய்க்கால்கள் அமைத்தல், பள்ளிகளில் சுற்றுச்சுவர் அமைத்தல், மரக்கன்றுகள் நடும் பணிகள் என பல்வேறு பணிகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

திண்டுக்கல் மாவட்டம், ரெட்டியார்சத்திரம் ஊராட்சி ஒன்றியம், மாங்கரை ஊராட்சியில் புதிய நியாயவிலைக்கடை, டி.புதுாரில் புதிய அங்கன்வாடி மையம் ஆகியவை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைக்கப் பட்டுள்ளன.

ரெட்டியார்சத்திரம் ஊராட்சி ஒன்றியம், அம்மாபட்டி ஊராட்சி பகுதிகளில் 2021-22 -ஆம் ஆண்டு 16 திட்டப்பணிகள் ரூ.57.98 இலட்சம் மதிப்பீட்டிலும், 2022-23ஆம் ஆண்டில் 26 திட்டப்பணிகள் ரூ.7.24 கோடி மதிப்பீட்டிலும், 2023-24ஆம் ஆண்டில் 14 திட்டப்பணிகள் ரூ.63.65 இலட்சம் மதிப்பீட்டிலும் என மொத்தம் 56 பணிகள் ரூ.8.46 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தருமத்துப்பட்டி ஊராட்சிப் பகுதிகளில் 2021-22 -ஆம் ஆண்டு 36 திட்டப்பணிகள் ரூ.1.94 கோடி மதிப்பீட்டிலும், 2022-23ஆம் ஆண்டில் 35 திட்டப்பணிகள் ரூ.3.60 கோடி மதிப்பீட்டிலும், 2023-24ஆம் ஆண்டில் 25 திட்டப்பணிகள் ரூ.66.21 இலட்சம் மதிப்பீட்டிலும் என மொத்தம் 96 பணிகள் ரூ.6.21 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மாங்கரை ஊராட்சிப் பகுதிகளில் 2021-22 -ஆம் ஆண்டு 40 திட்டப்பணிகள் ரூ.1.64 கோடி மதிப்பீட்டிலும், 2022-23ஆம் ஆண்டில் 52 திட்டப்பணிகள் ரூ.3.20 கோடி மதிப்பீட்டிலும், 2023-24ஆம் ஆண்டில் 19 திட்டப்பணிகள் ரூ.81.18 இலட்சம் மதிப்பீட்டிலும் என மொத்தம் 111 பணிகள் ரூ.5.66 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கோனுார் ஊராட்சிப் பகுதிகளில் 2021-22 -ஆம் ஆண்டு 25 திட்டப்பணிகள் ரூ.1.53 கோடி மதிப்பீட்டிலும், 2022-23ஆம் ஆண்டில் 57 திட்டப்பணிகள் ரூ.3.38 கோடி மதிப்பீட்டிலும், 2023-24ஆம் ஆண்டில் 22 திட்டப்பணிகள் ரூ.1.96 கோடி மதிப்பீட்டிலும் என மொத்தம் 104 பணிகள் ரூ.6.88 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கசவனம்பட்டி ஊராட்சிப் பகுதிகளில் 2021-22 -ஆம் ஆண்டு 45 திட்டப் பணிகள் ரூ.4.39 கோடி மதிப்பீட்டிலும், 2022-23 ஆம் ஆண்டில் 61 திட்டப்பணிகள் ரூ.3.55 கோடி மதிப்பீட்டிலும், 2023-24ஆம் ஆண்டில் 35 திட்டப்பணிகள் ரூ.1.89 கோடி மதிப்பீட்டிலும் என மொத்தம் 141 பணிகள் ரூ.9.84 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கரிசல்பட்டி ஊராட்சிப் பகுதிகளில் 2021-22 -ஆம் ஆண்டு 36 திட்டப்பணிகள் ரூ.1.11 கோடி மதிப்பீட்டிலும், 2022-23ஆம் ஆண்டில் 27 திட்டப்பணிகள் ரூ.2.11 கோடி மதிப்பீட்டிலும், 2023-24ஆம் ஆண்டில் 24 திட்டப்பணிகள் ரூ.1.45 கோடி மதிப்பீட்டிலும் என மொத்தம் 87 பணிகள் ரூ.4.68 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**மக்களுக்கான அரசாக திகழ்கிறது!**

திண்டுக்கல் மாவட்டத்தில் பொதுமக்களின் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக பல்வேறு இடங்களில் குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்தப் பட்டு வருகின்றன.

ரெட்டியார்சத்திரம் ஊராட்சி ஒன்றிய பகுதி பொதுமக்களுக்கு மட்டும் தனியாக குடிநீர் திட்டம் ரூ.208.00 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், திண்டுக்கல், வேடசந்துார் பகுதிகளுக்கு ரூ.109.00 கோடி மதிப்பீட்டில் குடிநீர் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதுதவிர ஒட்டன்சத்திரம் சட்டமன்றத் தொகுதிக்கு தனியாக காவிரி குடிநீர்த் திட்டம் ரூ.1000 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அனைத்துப் பகுதி மக்களின் குடிநீர்த் தேவையை முழுமையாக நிறைவு செய்யும் வகையில் திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

ஆத்துார் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் முதியோர் உதவித் தொகை நிறுத்தப்பட்டவர்களுக்கு மீண்டும் உரிய ஆவணங்கள் பெற்று வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

குடும்பத்தலைவிகளுக்கு மாதம் ரூ.1000 வழங்கும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் தகுதியுள்ளவர்கள் விடுபட்டிருந்தால் அவர்களுக்கும் இத்திட்டத்தின் பயன்கள் கிடைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வீடு இல்லாதவர்களுக்கு வீடு கட்டும் திட்டத்தில் வீடுகள் கட்டித்தர நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகிறது.

அரசின் சேவைகள் விரைவாகவும், எளிதாகவும் பொதுமக்களுக்கு சென்று சேரும் வண்ணம் ”மக்களுடன் முதல்வர்” திட்டத்தை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்துள்ளார்கள். இதில் அன்றாடம் பொதுமக்கள் அணுகும் வருவாய்த்துறை, மாநகராட்சி, நகராட்சி, பேருராட்சிகள் துறை, மாநகராட்சிக்கு ஒட்டியுள்ள பஞ்சாயத்து, காவல் துறை, மின்சாரத்துறை, வீட்டு வசதி வாரியத்துறை, மாற்றுத்திறனாளிகள் நலத் துறை, சமூக நலத்துறை, ஆதிதிராவிடர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை, கூட்டுறவுத்துறை, தாட்கோ, வேலைவாய்ப்புத்துறை மற்றும் மகளிர் திட்டம் ஆகிய 13 துறைகள் தொடர்புடைய கோரிக்கை மனுக்கள் இச்சிறப்பு முகாம்களில் பெறப் பட்டு வருகிறது. பெறப்படும் அனைத்து மனுக்களும் சம்மந்தப்பட்ட துறையினரால் பரிசீலனை செய்யப்பட்டு 30 தினங்களுக்குள் தகுதியின் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

அரசின் திட்டங்கள் கடைகோடி மக்களுக்கும் சென்று சேரும் வகையில், மக்களுக்காகவே இந்த அரசு செயல்பட்டு வருகிறது. அரசின் எந்தவொரு திட்டமும் தகுதியுள்ள நபர்களுக்கு விடுபடக் கூடாது என்பதில் இந்த அரசு கவனம் செலுத்தி வருகிறது. இது மக்களுக்கான அரசு, மக்களுக்காக செயல்பட்டு வரும் முதலமைச்சர் அவர்களுக்கு என்றென்றும் அதரவுடன் இருக்க வேண்டும்.

இவ்வாறு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ. பெரியசாமி தெரிவித்தார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### டி. இராசரத்தினம்

**சனவரி 8 (1993)**



செங்கற்பட்டு மாவட்டக் கழக அவைத் தலைவராகவும், தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் தொடர்ந்து பூவிருந்தவல்லி தொகுதி சட்டமன்ற உறுப்பினராக நான்குமுறையும் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பணியாற்றியவர்.

பூவிருந்தவல்லி ஒன்றிய பெருந்தலைவர், பூவிருந்தவல்லி பேரூராட்சித் தலைவர் உள்ளிட்ட பொறுப்புகளை ஏற்றுப் பணியாற்றியவர்.

விலைவாசி உள்ளிட்ட கழகம் அறிவித்த அறப்போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றுள்ளார்.

நெருக்கடிநிலை காலத்தில் மிசா சட்டத்தின்படி ஓராண்டு சிறை தண்டனை அனுபவித்தவர்.

“தோடிக்கு ஒரு இராசரத்தினம், தொகுதிக்கு ஒரு இராசரத்தினம்” என தலைவர் கலைஞர் அவர்களால் புகழப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

ஒன்றிய அரசின் நிதி ஒதுக்கீட்டில் பாகுபாடு!

# மாநில அரசுகளுக்கு செய்யும் முழுத்துரோகம்!

## சன் நியூஸ் தொலைக்காட்சி ‘கேள்விக் களம்’ நிகழ்ச்சியில் இந்திரகுமார் தேரடி ஆணித்தரம்!

**சென்னை, ஜன.8 –**

**ஒன்றிய அரசின் நிதி ஒதுக்கீட்டில் பாகுபாடு எனவும் இது மாநில அரசுகளுக்கு செய்யும் முழுத்துரோகம் எனவும் சன் நியூஸ் தொலைக்காட்சி ‘கேள்விக் களம் நிகழ்ச்சியில் பங்கேற்ற பத்திரிகையாளர் இந்திரகுமார் தேரடி கலந்து கொண்டு குறிப்பிட்டார்.**




சன் நியூஸ் தொலைக்காட்சியில் ‘கேள்விக்களம்’ நிகழ்ச்சியில் பத்திரிகையாளர் இந்திரகுமார் தேரடி கலந்துகொண்டு பேசியது வருமாறு:

**நெறியாளர்:** ஒன்றிய அரசு மீது வெறுப்பை திணிப்பதற்கான பிரச்சாரத்தை கையிலெடுத்திருக்கிறார்கள் என்பது பா.ஜ.க.வின் குற்றச்சாட்டாக இருக்கிறதே?

**இந்திரகுமார் தேரடி:** 520 கோடி ரூபாய் உடனே கொடுத்துவிட்டோம் என்று சொல்கிறார். மிட்டிகேசன் பண்டுக்கும், ரிலீப் பண்டுக்கும் வித்தியாசம் இருக்கு. நான் இதே அரங்கில் பலமுறை நேரில் விளக்கியிருக்கிறேன். இன்று நிதி அமைச்சர் பேசியது டீடெயிலா இல்ல. நிர்மலா சீதாராமன் பேசியது ரொம்ப டீடெயில்டா இருக்கிறது என்று சொல்கிறார்கள்.

என்ன டீட்டெயில் என்று பார்த்தால் 4 + 3 = 8 என்று குமாரசாமி போட்ட கணக்குத்தான் இதிலேயும் வந்து நிக்குது. இந்த டீடெய்ல்டைத்தான் தமிழ்நாடு நிதி அமைச்சர் சொல்ல வேண்டும் என்று எதிர் பார்க்கிறார்களா எனத் தெரியவில்லை. ரொம்ப எக்ஸாட்டா அவர் சொன்ன வார்த்தை சட்டப்படி கைடுலைன்ஸ் படி என்ன கொடுக்க வேண்டுமோ அதை கொடுத்து விடுகிறோம் என்று சொல்கிறார்கள். நிர்மலா சீதாராமன் மேடையிலேயே ரொம்ப தெளிவாகச் சொன்னாங்க. பைனான்ஸ் கமிஷன் கொடுக்கச் சொன்னதை கொடுத்து விடுகிறோம் என்று. பச்சப்பொய் இது வரைக்கும் பைனான்ஸ் கமிஷன் ஒவ்வொரு முறையும் கொடுக்கச் சொன்னதைவிட மிக மிகக் குறைவான தொகைதான். எல்லா மாநிலங்களுக்கும் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

குறிப்பாக தமிழ்நாட்டுக்கு ஒன்றிய அரசு அதாவது பைனான்ஸ் கமிஷன் ஒதுக்கச் சொன்ன தொகை என்னவென்றால் 42 சதவிகிதம் 14-வது பைனான்ஸ் கமிஷனில், 15-வது பினான்ஸ் கமிஷனில் 41 சதவீதம் மாநிலங்களுக்கு பிரித்துக்கொடுக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். அந்த 41 சதவீதத்தை கூட ஒன்றிய அரசு இன்று வரை எட்டவில்லை.

2001-லிருந்து எடுத்தாலும் சரி, 2014-லிருந்து எடுத்தாலும் சரி பெரிய அளவிற்கான வேறுபாடுகள் இருக்கிறது. ஆதாரம் என் கையில் இருக்கிறது. 30 சதவிகிதத்தை தாண்டி கொடுப்பதே இல்லை; மாநில அரசுக்கு நிதிப்பகிர்வு என்பதுதான் நிலைமை. ஆனால் கொடுத்ததை




விட அதிகமாக நாங்கள் திருப்பிக் கொடுக்கிறோம் என்று சொல்வது எங்கயோபோய் வட்டிக்கு விட்டதை சம்பாதித்து வந்தார்களா என்பது தெரியவில்லை.

மாநில அரசுகள் உள்ளபடியே, ஜி.எஸ்.டி.யாக இருக்கட்டும். ஹெல்த் டாக்சாக இருக்கட்டும். இப்படி பல விஷயங்களில் மாநில அரசு நேரடியான வரி, மறைமுகமான வரி என நிறைய விஷயங்களில் வசூலிக்கப்படுகிறது. இதிலிருந்து திருப்பி எவ்வளவு வருகிறது என்பது தான் நாம் கேட்கும் கேள்வி.

கொடுத்ததை விட அதிகமாக கொடுத்துவிட்டோம் என்பது 4+3 = 8 என்ற கணக்குத்தான், வேறு ஒன்றுமில்லை. இவர்கள் கொடுக்கிறது 32 சதவீதம், கொடுக்கச் சொன்னது 42 சதவீதம். மீதி 10 சதவீதம் எங்கே போகிறது என்றால் ஒன்றிய அரசினுடைய கள்ளக் கணக்குக்கு சென்று விடுகிறதா?

நிதியாண்டு 2012-ல் 10.4 சதவீதமாக இருந்த செஸ், சர்சார்ஜ் 2018-ல் அதாவது மோடி ஆட்சிக்கு வந்த 4 வருடத்தில் 11.4 சதவீதமாக மாறி 2021-ல் 20 சதவீதம். 2024-ல் 16 சதவீதமாக குறைக்கப்படலாம் என எதிர்பார்க்கப் படுகிறது.

அப்படியானால் உத்தரப்பிரதேசத்தில் 10 சதவிகிதமாக இருந்த செஸ் சர்சார்ஜ் இன்றைய தேதிக்கு 19.8 அதாவது ரவுண்டாக 20 சதவீதம் செஸ் சர்சார்ஜ். மக்களைப் பொறுத்தவரை செஸ் சர்சார்ஜ் என்னவென்று கேட்கலாம். ஒவ்வொருத்தரும் பெட்ரோல் போடும்போது செஸ்வரி, சர்சார்ஜ் என்று எழுதியிருப்பார்கள். எக்சைஸ் என்று ஒன்று இருக்கும். அதாவது ஒன்றிய அரசு வசூலித்து விட்டு மாநில அரசுகளுக்குப் பிரித்துக் கொடுக்கும். ஆனால் செஸ், சர்சார்ஜ் என்பது முழுவதும் ஒன்றிய அரசு வசூலிக்கும் பணத்தை அப்படியே எடுத்துக்கொள்ளும். மக்களிடமிருந்து நேரடியாக வழிப்பறி செய்து ஒன்றிய அரசு எடுத்துக்கொள்கிறதே தவிர அதிலிருந்து மாநில அரசுக்குப் பிரித்துக் கொடுப்பதே இல்லை.

தமிழ்நாட்டினுடைய நிதி அமைச்சராக பி.டி.ஆர். இருந்த போதும் சரி, இப்போது தங்கம் தென்னரசு இருக்கும்போதும் சரி நேரடியாக ஒன்றிய அரசுக்கு வைக்கும் சவால் ஒன்றே ஒன்றுதான். டிவிஷனுக்குள் செஸ், சர்சார்ஜை கொண்டுவர முடியுமா? முடியாதா? அப்படி கொண்டு வந்தீர்கள் என்றால் ஜி.எஸ்.டி. பற்றி விவாதிக்கலாம். அப்படி கொண்டு வரவே முடியாது என்றால் அது மாநிலங்களுக்கு செய்யக்கூடிய முழு துரோகம். இது பற்றி நிர்மலா சீதாராமன் அவர்கள் எதையுமே சொல்லவில்லை.

உத்தரப்பிரதேசத்திற்கு மட்டும் ஒரு லட்சத்து 17 ஆயிரம் கோடி. தமிழ்நாட்டிற்கு வெறும் 7 ஆயிரம் கோடியா? என்ன நியாயம்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

# பொங்கல் பரிசு தொகுப்புடன் ஆயிரம் ரூபாய்!

## அரசு முடிவுக்கு இந்திய கம்யூனிஸ்ட் இரா.முத்தரசன் வரவேற்பு!

சென்னை, ஜன. 8-

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயலாளர் இரா. முத்தரசன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கடந்த 2023 டிசம்பர் மாதம் மிக் ஜாம் புயல் தென் மாவட்டங்களில் பெய்த பெருமழை என இயற்கை பேரிடர் பாதிப்புகளை எதிர்கொண்ட தமிழ்நாடு அரசு பாதிக்கப் பட்ட மக்களுக்கு நிவாரண நிதியும், மறு வாழ்வுக்கான உதவிகளும் செய்து வருகிறது.



கடுமையான இயற்கை பேரிடர் பாதிப்புகளில் இருந்து மீளவும், மறு வாழ்வு பெறவும் ஒன்றிய அரசு 37 ஆயிரத்து 907 கோடியே 19 லட்சம் ரூபாய் பேரிடர் நிவாரண நிதி வழங்க வேண்டும் என வலியுறுத்தி வரும் நிலையில், பா.ஜ.க. ஒன்றிய அரசு, இயல்பான காலத்தில் வழக்கமாக வழங்கப்படும் மாநில பேரிடர் நிதி தவிர வேறு நிதி தராமல் வஞ்சித்து வருகிறது.

இந்த நிலையில் கடந்த 03.01. 2024 ஆம் தேதி தமிழ்நாடு அரசு அறிவித்த பொங்கல் பரிசு தொகுப்பில் ரொக்கப் பணம் இடம் பெறவில்லையே என கேள்வி எழுந்தது.

இது குறித்து இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி உட்பட அரசியல் கட்சிகளும் அமைப்புகளும் பொங்கல் பரிசு தொகுப்பில் பணம் இடம் பெற வேண்டும் என கோரிக்கை வைத்தன. ஜனநாயக உணர்வு கொண்ட மாநில அரசு, கடுமையான நிதி நெருக்கடிக்கு மத்தியிலும் பொங்கல் பரிசாக ரூ.1000/= (ஆயிரம்) அறிவித்திருப்பதற்கு இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் மாநில செயற்குழு நன்றி பாராட்டி வரவேற்கிறது.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், நாகர்கோவில் மாநகராட்சி பகுதியில் தூய்மை பணிக்கு ரூபாய் 3.50 கோடி மதிப்பீட்டில் 48 புதிய மினி டிப்பர் ஆட்டோக்களை கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ. மகேஷ் வாகனங்களை கொடியசைத்து துவக்கி வைத்தார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் மற்றும் ஒன்றிய வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சர் பியுஷ் கோயல் ஆகியோர் நேற்று (7.1.2024) சென்னை வர்த்தக மையத்தில், இரண்டு நாள் ”உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2024யை தொடங்கி வைத்து, கோத்ரெஜ் நிறுவனத்தின் சார்பில் செங்கல்பட்டு மாவட்டத்தில் அமைக்கப்படவுள்ள ஒருங்கிணைந்த உற்பத்தி தொழிற்சாலைக்கு அடிக்கல் நாட்டினர். இந்நிகழ்ச்சியில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், பன்னாட்டு தூதரக அதிகாரிகள், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, ஜப்பான் நாட்டின் கொச்சி மாகாண ஆளுநர் ஹமாதா செய்ஜி, இந்திய தொழில் கூட்டமைப்பின் தேசியத் தலைவர் ஆர்.தினேஷ், ஓலா எலக்ட்ரிக் நிறுவனத்தின் நிறுவனர் மற்றும் தலைமை செயல் அலுவலர் பவிஷ் அகர்வால், கோத்ரெஜ் நிறுவனத்தின் தலைவர் திருமதி. நிசாபா கோத்ரெஜ், டி.வி.எஸ் நிறுவனத்தின் தலைவர் எமரிட்டஸ் வேணு ஸ்ரீநிவாசன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி. அருண்ராய், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களின் தலைவர்கள் / தலைமை செயல் அலுவலர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (7.1.2024) சென்னை வர்த்தக மையத்தில், இரண்டு நாள் “உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2024யை தொடங்கி வைத்து, சென்னையில் அமைக்கப்பட்டுள்ள க்வால்காம் டிசைன் சென்டரை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், ஒன்றிய வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சர் பியுஷ் கோயல், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், பன்னாட்டு தூதரக அதிகாரிகள், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, ஜப்பான் நாட்டின் கொச்சி மாகாண ஆளுநர் ஹமாதா செய்ஜி, இந்திய தொழில் கூட்டமைப்பின் தேசியத் தலைவர் ஆர்.தினேஷ், ஓலா எலக்ட்ரிக் நிறுவனத்தின் நிறுவனர் மற்றும் தலைமை செயல் அலுவலர் பவிஷ் அகர்வால், கோத்ரெஜ் நிறுவனத்தின் தலைவர் திருமதி. நிசாபா கோத்ரெஜ், டி.வி.எஸ் நிறுவனத்தின் தலைவர் எமரிட்டஸ் வேணு ஸ்ரீநிவாசன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி. அருண்ராய், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களின் தலைவர்கள் / தலைமை செயல் அலுவலர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (7.1.2024) சென்னை வர்த்தக மையத்தில், இரண்டு நாள் ”உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2024யை தொடங்கி வைத்து, காஞ்சிபுரம் மாவட்டம் பிள்ளைப்பாக்கம் சிப்காட் வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள ஃபர்ஸ்ட் சோலார் நிறுவனத்தின் Vertically Integrated Semi Conductor to PV Module தயாரிப்பு தொழிற்சாலையை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், ஒன்றிய வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சர் பியுஷ் கோயல், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், பன்னாட்டு தூதரக அதிகாரிகள், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, ஜப்பான் நாட்டின் கொச்சி மாகாண ஆளுநர் ஹமாதா செய்ஜி, இந்திய தொழில் கூட்டமைப்பின் தேசியத் தலைவர் ஆர்.தினேஷ், ஓலா எலக்ட்ரிக் நிறுவனத்தின் நிறுவனர் மற்றும் தலைமை செயல் அலுவலர் பவிஷ் அகர்வால், கோத்ரெஜ் நிறுவனத்தின் தலைவர் திருமதி. நிசாபா கோத்ரெஜ், டி.வி.எஸ் நிறுவனத்தின் தலைவர் எமரிட்டஸ் வேணு ஸ்ரீநிவாசன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி. அருண்ராய், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களின் தலைவர்கள் / தலைமை செயல் அலுவலர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (7.1.2024) சென்னை வர்த்தக மையத்தில், இரண்டு நாள் ”உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2024யை தொடங்கி வைத்து, ”தமிழ்நாடு குறைக்கடத்தி மற்றும் மேம்பட்ட மின்னணுக் கொள்கை 2024யை வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில், ஒன்றிய வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சர் பீயூஷ் கோயல், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், பன்னாட்டு தூதரக அதிகாரிகள், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, ஜப்பான் நாட்டின் கொச்சி மாகாண ஆளுநர் ஹமாதா செய்ஜி, இந்திய தொழில் கூட்டமைப்பின் தேசியத் தலைவர் ஆர்.தினேஷ், ஓலா எலக்ட்ரிக் நிறுவனத்தின் நிறுவனர் மற்றும் தலைமை செயல் அலுவலர் பவிஷ் அகர்வால், கோத்ரெஜ் நிறுவனத்தின் தலைவர் திருமதி. நிசாபா கோத்ரெஜ், டி.வி.எஸ் நிறுவனத்தின் தலைவர் எமரிட்டஸ் வேணு ஸ்ரீநிவாசன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி. அருண்ராய், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களின் தலைவர்கள் / தலைமை செயல் அலுவலர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




# திராவிட மாடல் அரசு 50

**‘முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்’ என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து தமிழ்நாட்டின் வளர்ச்சியை முன்னோக்கிக் கொண்டு செல்லும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார், நமது முதலமைச்சர். உள்ளடக்கிய வளர்ச்சியைக் கொண்ட அந்தத் திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி.**






## ‘கிக்’(GIG) தொழிலாளர்கள் : அரவணைத்த அரசு!

நாட்டிலேயே கிக் தொழிலாளர்களின் நலனுக்காக சட்டம் இயற்றிய முதல் மாநிலம் ராஜஸ்தான். ஆனால், சட்டம் இயற்றியதோடு சரி. சொல்லிக்கொள்ளும்படியான முன்னேற்றம் எதுவும் ஏற்படவில்லை. இந்தப் பின்னணியில் பார்த்தால், கிக் தொழிலாளர்களுக்காக முதன்முதலில் நலவாரியத்தை ஏற்படுத்தி, உள்ள மாநிலம், தமிழ்நாடு என்று பெருமையாக சொல்லலாம். இந்த நலவாரியத்தையும் சேர்த்து அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு என தமிழ்நாட்டில் இதுவரை ஏற்படுத்தப்பட்டுள்ள நலவாரியங்களின் எண்ணிக்கை 19 ஆக உயர்ந்துள்ளது.

*இணையம் பரவலாகத் தொடங்கிய காலத்தில், ‘உள்ளங்கையில் உலகம்’ என்பது பிரபலமான சொற்றொடராக இருந்தது. அவர்களிடமே யாராவது சென்று, ‘உள்ளங்கையில் உணவு’, ‘உள்ளங்கையில் பயணம்’ என்று சொல்லி இருந்தால் ‘ங்கே’ என்று விழித்திருப்பார்கள்.*

*ஆனால், இணையம், தகவல் தொழில்நுட்பம் என்பவை எல்லாம் கட்டற்ற சாத்தியங்களைக் கொண்டவை. அவற்றின் மூலம் இன்று இருந்த இடத்திலிருந்தே உணவை வர வைக்க முடிகிறது. இன்னொரு பகுதிக்குச் செல்ல வாடகைக்கு வாகனங்களை அமர்த்திக் கொள்ள முடிகிறது. வீட்டுக்குத் தேவையான பொருட்களை நொடிகளில் ‘ஆர்டர்’ செய்து, ஒன்றிரண்டு நாட்களில் வர வைத்து விட முடிகிறது.*

*எந்த ஓர் அரசின் கணக்கெடுப்புகளுக்குள்ளும் வராத இந்தத் தொழில்துறையைப் பொருளாதார வல்லுநர்கள் ‘கிக் எகானமி’ (தற்காலிக பொருளாதாரம்) என்று அடையாளப்படுத்துகிறார்கள். எப்போது வேண்டுமானாலும் பணி செய்யலாம், எப்போது வேண்டுமானாலும் ஓய்வெடுக்கலாம். அதற்கேற்றபடி ஊதியமும் இருக்கும். பெரும்பாலும் இது முழு நேரமாக இல்லாத ஆனால், கூடுதல் வருமானத்துக்காக ஓய்வு நேரத்திலும் மக்கள் பணிபுரிந்து சம்பாதிப்பதால் இது ‘தற்காலிக பொருளாதாரம்’ என்று அழைக்கப்படுகிறது.*

*இவர்களும் நமது மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவுகிறார்கள். ஆகவே இவர்களுக்கும் ஒரு நல வாரியம் தேவை என்று நம் கழகத் தலைவர் முதலமைச்சர் தலைமையிலான ’திராவிட மாடல் அரசு‘சிந்தித்ததன் விளைவே* **‘கிக் தொழிலாளர்கள் நலவாரியம்’** *ஏற்படுத்தப் பட்டுள்ளது.*

### எண்ணிக்கை அறிவதே முதல்படி!

*இந்தியாவில் ‘ஊபர்’, ‘ஓலா’, ‘ஸ்விக்கி’, ‘சொமேட்டோ’ உள்ளிட்ட அமைப்பு சாரா தொழில் நிறுவனங்கள் உள்ளன. இவை அரசு நிர்ணயித்த ஊதிய வரம்பு மற்றும் இதர நலன்கள், பணி விதிகள் என எதற்கும் கட்டுப்படுவதில்லை.*

*அத்தகைய தொழில்துறையை நம்பி, சுமார் 1 கோடியே 50 இலட்சம் பேர் இருப்பதாக 2023 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் வெளியான ‘பாஸ்டன் கன்சல்டிங் குரூப்’ எனும் அமெரிக்க நிறுவனம் ஆய்வறிக்கை ஒன்று கூறுகிறது.*

*நாம் விரும்பும் நேரத்தில் ‘லாக் இன்’ செய்து பணிபுரியலாம் என்பதும், எவ்வளவு உழைக்கிறோமோ, அதற்கேற்ப காசு கையில் கிடைக்கும் என்கிற உத்தரவாதமும்தான் இந்தத் துறைக்குள் பலரை இழுக்கிறது. ஏற்கெனவே, வேலையில் இருப்பவர்களும்கூட, தங்களுக்குக் கிடைக்கும் ஓய்வுநேரத்தில் ‘ஓலா’ ஓட்டியாவது பணம் சேர்க்கலாம் என்று இத்துறைக்குள் வந்தபடி உள்ளனர். குறிப்பாக, கோவிட் பெருந்தொற்றுக்குப் பிறகு இவ்வாறு ‘கிக்’ தொழிலாளர் எண்ணிக்கை அதிகரித்துள்ளது குறிப்பிடத்தக்கது.*

*தமிழ்நாட்டில் இந்தக் ’கிக்’ தொழிலாளர் எண்ணிக்கை சுமார் ஒரு இலட்சம் பேர் இருக்கலாம் என்று ஊகிக்கப்படுகிறது. மக்கள் நலம் தொடர்பான ஒரு திட்டம் கொண்டு வரப்பட வேண்டுமெனில், முதலில் அந்தத் திட்டத்தால் எத்தனை பயனாளிகள் நேரடியாகப் பயன்பெறுவார்கள் என்ற கணக்கு இருந்தால்தான் அந்தத் திட்டத்தை இன்னும் செம்மைப்படுத்த முடியும்.*

*அங்குதான் பிரச்சினையே. இந்த ‘கிக்’ தொழிலாளர் பற்றிய தோராயமான கணக்கு கூட ஒன்றிய அரசிடம் இல்லை. ஒன்றியத்துக்கு வழிகாட்ட முதன்முதலாக தமிழ்நாடு இந்த நலவாரியம் அமைத்ததன் மூலமாக, மாநிலத்தில் ‘கிக்’ தொழிலாளர் எண்ணிக்கையை அதிகாரப்பூர்வமாக அறிந்துகொள்ளவும் முதல் அடியை எடுத்து வைத்துள்ளது.*

### சுரண்டலில் இருந்து விடுதலை!

*அரசு விதிகளுக்கு ஏற்ப நடைபெறும் நிறுவனங்களிலேயே தொழிலாளர்கள் பல வகையான சுரண்டல்களுக்கு ஆளாகிறார்கள். எனில், தங்களுக்கென்று எந்த அங்கீகரிக்கப்பட்ட அமைப்போ அல்லது குறைந்தபட்ச வேலை பாதுகாப்போ இல்லாத கிக் தொழிலாளர்களின் நிலையைப் பற்றிக் கேட்கவும் வேண்டுமா?*

*தொழிலாளர் நலனில் மிகுந்த அக்கறை கொண்ட நம் கழக அரசு, அமைப்பு சாரா தொழிலாளர்கள் பயன்பெறும் வகையில், பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. அதன் தொடர்ச்சியாக, தமிழ்நாட்டில், உணவு விநியோகம், மின்-வர்த்தக நிறுவனங்களால் மேற்கொள்ளப்படும் மளிகை உள்ளிட்ட அனைத்து வகை வணிகப் பொருட்களின் விநியோகங்கள், இணையச் செயலி வழியாக வழங்கப்படும் வாடகை வாகன சேவைகள் மற்றும் இதர சேவைகள் ஆகியவை தற்போது இணையவழி ‘கிக்’ (GIG) முறையில் மேற்கொள்ளப்படுகின்றன.*

*இந்நிலையில், தமிழ்நாடு முழுவதும் இணைய வழியே உணவு விநியோகம் உள்ளிட்ட சேவைப் பணியில் ஈடுபட்டுள்ள அமைப்பு சாரா கிக் தொழிலாளர்களின் நலனைப் பாதுகாக்கும் வகையில், அவர்களுக்கெனத் தனியே நலவாரியம் அமைக்கப்படும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 2023 ஆகஸ்ட் 15 அன்று சுதந்திர தின உரையில் அறிவிக்கப்பட்டது.*

*அதனைத் தொடர்ந்து, ‘தமிழ்நாடு இணையம் சார்ந்த கிக் (TAMIL NADU PLATFORM BASED GIG WORKERS WELFARE BOARD) தொழிலாளர் நலவாரியம்’ எனும் புதிய நலவாரியத்தைத் தோற்றுவித்து, சமீபத்தில் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.*

### நலவாரியம் நல்கும் நலன்கள்

*இணையதளம் வாயிலாகப் பொருட்கள் விநியோகம் மற்றும் சேவைகள் வழங்கும் பணிகளில் ஈடுபடும் தொழிலாளர்களின் நலன்களைப் பாதுகாக்கும் பொருட்டு, தமிழ்நாடு அரசு இணையம் சார்ந்த கிக் தொழில்களை, தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலை மற்றும் பணி நிலைமைகள் முறைப்படுத்துதல்) சட்டம், 1982-ன் அட்டவணையின் கீழ் சேர்த்துள்ளது.*

*இந்த வாரியத்துக்கான திட்டக் கூறுகள் நிறைவேற்றப்படும் வரையில், இந்தத் தொழிலாளர்கள் தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியத்தில் பதிவு பெற்று பலனடைய வகை செய்யப்பட்டுள்ளது.*

*இதன்படி, தமிழ்நாட்டில் உள்ள கிக் தொழிலாளர்கள் WWW.TNUWWBTNGOV.IN எனும் இணையதளம் வாயிலாக GIGW என்ற தொழில் குறியீட்டின் கீழ் தங்களைத் தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியத்தில் பதிவு செய்து கொள்ளலாம்.*

*18 வயது முதல் 60 வயது வரையிலான ESI மற்றும் EPF திட்டத்தில் உறுப்பினராக இல்லாத தொழிலாளர்கள் இந்த வாரியத்தில் பதிவு பெற தகுதியானவர்கள் ஆவார்கள். பதிவுக்குத் தொழிற்சங்கம் அல்லது வேலை வழங்கும் நபரிடமிருந்து பெறப்பட்ட தொழிற்சான்று இணைக்கப்பட வேண்டும்.*


*இந்த வாரியத்தில் பதிவு செய்வதன் மூலம் தொழிலாளர்கள் தங்களது குழந்தைகளின் 6-ஆம் வகுப்பு முதல் முதுகலைப் பட்டம் வரையிலான கல்விக்கான நல உதவிகளைப் பெறலாம். பெண் தொழிலாளர்கள் தங்களின் திருமணம் மற்றும் மகப்பேறுக்கான நல உதவிகளையும், ஆண் தொழிலாளர்கள் தங்கள் திருமணத்துக்கான உதவித் தொகையினையும் பெறலாம்.*

*தவிர, பதிவு பெற்ற தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கான திருமண நல உதவியும் வழங்கப்படும். பதிவு பெற்ற தொழிலாளரின் இயற்கை மரணம் அல்லது விபத்து மரணத்துக்கு அவரது நியமனதாரருக்கு ஈமச் சடங்கு செலவினத்துடன் உதவித் தொகையும் வழங்கப்படும். விபத்து ஊனத்துக்கான நல உதவி, கண் கண்ணாடி வாங்குவதற்கான நல உதவி போன்றவற்றுடன் 60 வயது நிறைவடைந்த தொழிலாளர்களுக்கு மாதந்தோறும் ரூ.1,200/- ஓய்வூதியமும் வழங்கப்படும். 60 வயதுக்கு முன்பாக உடல்நலக் குறைவின் காரணமாக இயல்பான பணிகளையும் செய்ய முடியாத வகையில் ஊனம் அடையும் தொழிலாளர்களுக்கு, ‘முடக்கு ஓய்வூதியம்’ மாதம் தோறும் ரூ.1,200/- வழங்கப்படும்.*

*ஒரே நாளில் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட அரசு ஊழியர்கள் வீட்டுக்கு அனுப்பப்பட்ட கூத்துகள் எல்லாம் நடந்த இதே தமிழ்நாட்டில்தான் இன்று, ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட கிக் தொழிலாளர்களுக்கு நலவாரியம் ஏற்படுத்தும் கட்சியும் அரசும் இருக்கின்றன. எந்த அரசியல் ஆதாயத்தையும் எதிர்பார்க்காமல், அனைவரையும் அரவணைத்துச் செல்லும் ’திராவிட மாடல் அரசு’, காலமெல்லாம் நிலைத்து நிற்கும்...!*

**...சாதனை தொடரும்**

## கால்டுவெல்லின் தமிழ்க் கொடை !




ஃபிரான்சிஸ் வைட் எல்லிஸ் என்பவர், தென்னிந்திய மொழிகள் ஒரு தனிக் குடும்ப மொழிகள் என்றும், அவை சமஸ்கிருத மொழியிலிருந்து தோன்றியவை அல்ல என 1816 ஆம் ஆண்டு தன் கருத்தை முன் வைத்தார்.

அதாவது, கால்டுவெல்லுக்கு ஏறக்குறைய 40 ஆண்டுகளுக்கு முன்பே திராவிடக் குடும்ப மொழிகளின் ஆய்வு தொடங்கிவிட்டது. எல்லிஸ் என்பவரின் மூலம் கருக்கொண்ட திராவிடக் குடும்ப மொழிகள் என்ற கருத்தாக்கம் கால்டுவெல்லின் ஆய்வு மூலம் குழந்தையாக உருவெடுத்தது. ‘திராவிட’ என்ற சொல்லுக்கு ஒரு நிலையான அர்த்தத்தைக் கொடுத்தவர் கால்டுவெல். திராவிட மொழிகள் என்பவை ஒரு குடும்ப மொழிகள் என்றும், அவற்றை வரையறுக்கக் கூடிய மொழி அமைப்புக் கூறுகள் தனியாக உள்ளன என்றும், சமஸ்கிருதம் போன்ற வட இந்திய மொழிகளில் இருந்து வேறுபட்டவை என்றும் கால்டுவெல் தெளிவாகக் கூறினார்.

ரூபாய் 200 மதிப்புள்ள இந்நூல் தள்ளுபடி விலையில் ரூபாய் 130-க்கு என சென்னை புத்தகக் காட்சியில் உள்ள சாகித்ய அகாடமி அரங்கில் (அரங்கு எண்: 426-சி 426- டி) விற்பனை செய்யப்படுகிறது. மொழியியல் மட்டுமில்லாமல் ‘கொற்கை அகழாய்வு’ உள்ளிட்ட கால்டுவெல்லின் மொத்த வாழ்வையும் பணியையும் விவரிக்கும் அரிய நூல் இது.

**-பத்திரிகையாளர் சாளை பஷீர்**
**ஃபேஸ்புக் பதிவு**

## ஃப்ளாஷ்பேக்




சேகர்

### தமிழர் திருநாளில் கௌரவம்!

1993 ஆம் ஆண்டு தமிழர் திருநாளையொட்டி, சென்னை மாவட்ட இளைஞர் அணியில் சிறப்புற பணியாற்றிய, பகுதி அமைப்பாளர்களைப் பாராட்டி கௌரவிக்கும் விழா அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்றது. தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள் எங்களை எல்லாம் பாராட்டி பொன்னாடை அணிவித்து, சிறப்பாகப் பணியாற்றும்படி வாழ்த்தினார். அன்றைய இளைஞர் அணி மாநில துணைச் செயலாளர் திருச்சி சிவா அவர்களும் அப்போது உடனிருந்தார்.

**-இராயபுரம் சு.சேகர்,**
**தி.மு.க இளைஞர் அணி முன்னாள் அமைப்பாளர்,**
**வடசென்னை மாவட்டம்.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600018. வாட்ஸ்அப் எண் : 90033 -24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### சேலம் திருப்புமுனை மாநாடு!

**1944 இல் நீதிக்கட்சியின் 16-வது மாநில மாநாடு சேலத்தில் நடைபெற்றது. அலங்கரிக்கப்பட்ட சாரட் வண்டியில் தந்தை பெரியாரும் சவுந்திர பாண்டியனாரும் அழைத்து வரப்பட, அறிஞர் அண்ணா, கி.ஆ.பெ.விசுவநாதன் ஆகியோர் புடைசூழ்ந்து ஊர்வலத்தில் வந்தனர். சுமார் 3 கி.மீ. நீண்டிருந்த ஊர்வலப் படை, மாநாட்டுப் பந்தலை அடைந்தும் எல்லோராலும் உள்ளே நுழைய முடியவில்லை. பந்தல் நிரம்பி பலர் பந்தலுக்கு வெளியிலும் தெருக்களிலும் மக்கள் கூட்டம் நிரம்பி வழிந்தது. அந்த மாநாட்டில்தான் ‘தென்னிந்திய நல உரிமைச் சங்கம்’ ‘திராவிடர் கழக’மாகப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 353




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131